**கவனிக்க.-** *2010.04.30 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1653 - 2010 මැයි මස 07 වැනි සිකුරාදා - 2010.05.07

*1653 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மே மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 874 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 875 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 878 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, மே மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2924.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தர படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, யூன் மாதம் 28 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றப்படுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் அஜித்த பசன் உல்லுவில ஹேவகே, கவீப (உ/62966)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2009, செத்தெம்பர் 10.

5-112

---

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2902.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தர படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, மாச்சு மாதம் 03 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றப்படுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

இரண்டாம் லெப்டினன்ட் ஜயசிங்க முதியன்சேலாகே லசித்த ஜயசிங்க, இசிரெ (உ/62811)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2009, செத்தெம்பர் 10.

5-29

---

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2903.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தர படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றப்படுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

இரண்டாம் லெப்டினன்ட் மல்லவஆரச்சிகே தினேஸ் சாமர மல்லவஆரச்சி, கரெ (உ/63299)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2009, ஓகத்து 27.

5-28

---

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2932.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்

இலங்கை தரைப்படையின் நிரந்தர படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றப்படுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

இரண்டாம் லெப்டினன்ட் விஜேநாயக்க முதியன்சேலாகே ஜானக்க தர்மபிரிய விஜேநாயக்க, இபொ (உ/62534)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2009, செத்தெம்பர் 10.

5-111

டீஆர்எவ்/21/ஆர்ஈசீர்/2888.

## இலங்கை தரைப்படை - நிரந்தரப் படை

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றுதல்*

இலங்கை தரைப்படையின் நிரந்தர படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2009, மே மாதம் 05 ஆந் திகதியிலிருந்து அபகீர்த்தியாக சேவையிலிருந்து அகற்றப்படுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

இரண்டாம் லெப்டினன்ட் புலத்சிங்கலகே ரோய் ஜயஷாந்த குரே, கவீப (உ/63140)

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2009, ஓகத்து 27.

5-30

2010 இன் இல. 77

ச. அ. இல. ஏஅன்ட்ஓ/ஏ7/2005(26)

அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41(1) ஆம் உறுப்பிரையின் கீழ், 2009.07.20 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு I ஐச் சேர்ந்த திரு. டி. ஆர். ஜே. ஆர். விஜேதிலக அவர்களை சனாதிபதியின் மேலதிகச் செயலாளர் ஒருவராக நியமிப்பதில் களிகூர்ந்துள்ளார் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

டி. எஸ். குணரத்ன,
சனதிபதியின் மேலதிகச் செயலாளர்,
(நிருவாகமும் நடவடிக்கையும்)
சனாதிபதியின் செயலாளருக்காக.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01.
2010, ஏப்பிறல் 22.

5-141

# அரசாங்க அறிவித்தல்கள்

## யாத்திரைகள் கட்டளைச் சட்டம்

தென்மாகாணத்தின் மாத்தறை மாவட்டத்தில் ஸ்ரீ ரோஹன சங்கசபையின் வருடாந்த உபசம்பதா புண்ணிய உற்சவம் 2010 ஆம் ஆண்டின் மே மாதம் 01 ஆந் திகதி சனிக்கிழமை தொடக்கம் 2010, மே மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறும் என்பதை (175 ஆம் அத்தியாயம்) யாத்திரிகள் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்டு 2008 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலக்கம் 1/563 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை அரசாங்க வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் அறியத்தருகிறேன்.

டபிள்யூ. கே. கே. அத்துகோறாள,
மாவட்ட செயலாளர்,
மாத்தறை.

மாத்தறை மாவட்ட செயலகம்,
2010, ஏப்பிறல் 20.

5-139

---

## வற்றாப்பளை கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் - 2010

முல்லைத்தீவு மாவட்டம்

மேற்படி பொங்கல் உற்சவம் 2010 ஆம் ஆண்டு மே மாதம் 10 ஆந் திகதி முற்பகல் 6.00 மணிக்கு ஆரம்பமாகி 2010 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முடிவடையும் என்பது பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது.

2. 1949.05.27 ஆந் திகதியும் 9978 ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் 1950.05.26 ஆந் திகதியும் 10105 ஆம் இலக்கமும் கொண்ட அரசாங்க வர்த்தமானியிலும் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகள் பொதுமக்கள் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றன.

3. மேற்கூறப்பட்ட கட்டளைகள் இவ் உற்சவத்தின் போது அமுல்படுத்தப்படும்.

(திருமதி) இமெல்டா சுகுமார்,
மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

2010, ஏப்பிறல் 15.

5-140

---

ச. வ.- பீ 277/40

## புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டம்

(188 ஆம் அத்தியாயமான) புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 47 ஆம் பிரிவின் கீழ் பண்பாட்டலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமை அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதி.

பண்பாட்டலுவல்கள் மற்றும்
தேசிய மரபுரிமைகள் அமைச்சர்.

2010.03.27.

## ஒழுங்கு விதி

1. இவ்வொழுங்கு விதி 2010 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, புராதனப் பொருட்கள் வெகுமதி நிதிய ஒழுங்குவிதி என எடுத்துக்காட்டப்படலாம்.

2. தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி, புராதனப் பொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட புராதனப் பொருட்கள் வெகுமதி நிதியத்துக்கு ஒவ்வொரு மாதமும் வரவுவைக்கப்பட்ட எல்லாப் பணங்களையம் பதிவதற்கு அவரது அலுவலகத்தில் இடாப்பொன்றைப் பேணுதல் வேண்டும் அல்லது பேணுவித்தல் வேண்டும்.

3. ஏழாம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகளுக்கமைய, பின்வரும் ஆட்கள், புராதனப் பொருட்கள் வெகுமதி நிதியத்திலிருந்து பணவகையான வெகுமதியொன்று செலுத்துவதற்கு உரித்துடையோராதல் வேண்டும் :-

(அ) பிரதான பொலிசுப் பரிசோதகர் அல்லது ஒரு பிரதான பரிசோதகர் பதவி வரிசைக்குக் குறைந்த பதவியிலுள்ள எவரேனும் அலுவலர் அல்லது புராதனப் பொருளொன்றை ஏற்றுமதி செய்வதனைக் கண்டுபிடிப்பதில் சம்பந்தப்பட்ட இலங்கைச் சுங்கத்தின் எவரேனும் அலுவலர் ;

(ஆ) ஒரு பதவிநிலை அலுவலர் பதவி வரிசைக்குக் குறைந்த பதவியிலுள்ளவரும், தொல்பொருளியல் திணைக்களத்தைச் சேர்ந்தவருமான எவரேனும் ஊழியர் ;

(இ) ஒரு பதவிநிலை அலுவலர் பதவி வரிசைக்குக் குறைந்த பதவியிலுள்ளவரும், பகிரங்க சேவையை அல்லது ஒரு நியதிச் சட்டமுறையான குழுவை அல்லது உள்ளூரதிகார சபையைச் சேர்ந்தவருமான எவரேனும் ஊழியர் ;

(ஈ) எவரேனும் வலுவுறுத்தல் அலுவலர்;

(உ) தொல்பொருளியல் திணைக்கள்தின் உதவிச் சட்ட அலுவலர் உட்பட அத்தகைய திணைக்களத்தின் சட்ட அலுவலர்களும் எவரேனும் வலுவுறுத்தல் அலுவலரும்.

4. தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி, பின்வருவன வற்றுக்காக, 3 ஆம் ஒழுங்கு விதியிற் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு, புராதனப் பொருட்கள் வெகுமதி நிதியத்தின் பணங்களிலிருந்து, இதற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட வாறான அத்தகைய பணவகையான வெகுமதிக் கொடுப்பனவை எழுத்தில் அதிகாரமளிக்கலாம் :-

(அ) சட்டப்படியற்ற வகையில் தனக்கென்று எடுத்துக் கொள்ளப் பட்ட புராதனப் பொருட்களை மீட்டுப்பெறுவதற்குப் பங்களிக் கின்ற எவரேனும் தகவலளிப்பவருக்கு அல்லது எவரேனும் வலுவுறுத்தல் அலுவலருக்கு வெகுமதியளிக்கும் நோக்கத்துக் காக ;

(ஆ) தொல்பொருளியற்சார் இடங்களையும் புராதனப் பொருட்களை யும் பாதுகாப்பதற்காக.

5. மாவட்டச் செயலாளர், பிரதேச செயலாளர் அல்லது ஏதேனும் பொலிசு நிலையத்துக்குப் பொறுப்பாகவுள்ள எவரேனும் அலுவலர் இவ்வொழுங்கு விதியின் கீழ் எவரேனுமாளிடமிருந்து இயைபான ஏதேனும் தகவலைப் பெறுமிடத்து, அத்தகைய அலுவலர், அத்தகைய ஆளினால் இயைபான தகவல் வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்தி, தொல்பொருளியல் பணிப்பளர் தலைமையதிபதிக்கு முகவரியிடப்பட்ட சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

6. இவ்வொழுங்கு விதியின் கீழ் வெகுமதியொன்றுக்குத் தகவுடையவரும், 3 ஆம் ஒழங்கு விதியிற் குறித்துரைக்கப்படுகின்ற வருமான எவரேனும் ஆள், 5 ஆம் ஒழுங்கு விதியின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழுடன் பின்வரும் தகவலைக் கொடுத்து, தமது விண்ணப்பத்தைத் தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி யிடம் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) வழக்கொன்று தொடுக்கப்பட்டிருப்பின் நீதிமன்றத்தின் விபரங்களும், வழக்கானது சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் தொடுக்கப்பட்டுள்ளதோ அந்த பிரிவும், அத்தகைய நீதிமன்றங்களினால் ஆக்கப்பட்ட கட்டளையுட்பட, வழக்கின் விபரங்களும் ;

(ஆ) இவ்வொழுங்கு விதியின் கீழான ஏதேனும் கருமம் தொடர்பாக வேறெவரேனும் தொழில்தருநரினாலான ஒரு வெகுமதிக் கொடுப்பனவு பற்றிய விபரங்கள் ;

(இ) வழக்கெழுதுவும் தொடுக்கப்படாதுள்ளவிடத்து, வலுவுறுத்தல் அலுவலர் அல்லது தகவலளிப்பவர் தொடர்பான விபரங்களும், தகவல் பெறப்பட்ட தேதியும், மற்றும் பெறுகின்ற அலுவலரின் விபரங்களும்.

7. தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதி, பொலிசுக் கட்டளைச் சட்டத்தின் 73 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கிணங்க, 3 ஆம் ஒழுங்கு விதியிற் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் பொலிசு அலுவலருக்கு வெகுமளித்தல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஒழுங்குவிதியெதுவும் கிடைக்கக் கூடியதாகவிராதவிடத்து, அத்தகைய கொடுப்பனவு 9 ஆம் ஒழுங்குவிதிக்கிணங்கச் செலுத்தப்படுதல் வேண்டும்.

8. பணிப்பாளர் தலைமையதிபதி, இவ்வொழுங்குவிதியின் கீழ் செலுத்தப்பட வேண்டிய வெகுமதியைக் கணிப்பீடுசெய்யும் போது பின்வருவனவற்றைக் கவனத்துட்கொள்ளுதல் வேண்டும் :-

(அ) வெகுமதியொன்றுக்குத் தகவுடையவராகவுள்ள எவரேனும் அலுவலர் இவ்வொழுங்குவிதியின் கீழ் தமது கடமைகளைப் புரியும்போது அவரினால் உறப்பட்ட செலவுகள் ;

(ஆ) இவ்வொழுங்கு விதியின் கீழ் புரியப்பட்ட வேலை தொடர்பாக அத்தகைய அலுவலரினாற் புரியப்பட்ட சேவைகளினது மேலதிக மணித்தியாலயங்களின் எண்ணிக்கை ;

(இ) அவரது கடமைகளைப் புரியும் போது அத்தகைய அலுவலர் முகங்கொடுக்கவேண்டியிருந்த ஏதேனும் கஷ்டம், அவரினால் உறப்பட்ட எவையேனும் ஊறுகள், மற்றும் அவரினால் அடையப்பட்ட நட்டங்கள் எவையேனுமிருப்பின், அவை ;

(ஈ) புராதனப் பொருட்களை அல்லது பொல்பொருளியற்சார் இடங்களைக் கண்டுபிடிப்பதில் அல்லது பாதுகாப்பதில், அத்தகைய அலுவலரினால் புரியப்பட்ட சேவைகளின் இயைபான தன்மையும் முக்கியத்துவமும். கண்டுபிடிக்கப்பட்ட அல்லது பாதுகாக்கப்பட்ட புராதனப் பொருட்களின் தொல் பொருளியற்சார் பெறுமதியும் ; அத்துடன்

(உ) தொழிலிடமானது வெகுமதி நிதியமொன்றைத் தாபித்திருப் பின், இவ்வொழுங்கு விதியின்கீழ் குறித்துரைக்கப்பட்ட

நோக்கங்களுக்காக 3 ஆம் ஒழுங்கு விதியிற் குறித்துரைக்கப் பட்ட எவரேனும் தொழில் தருநரினால் அல்லது எவரேனு மாளினால் செலுத்தப்பட்ட கொடுப்பனவு ஏதேனுமிருப்பின், அது.

9. ஆறாம் ஒழுங்குவிதியின் கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன் றைப் பெற்றதன் மேல், பணிப்பாளர் தலைமையதிபதி, 8 ஆம் ஒழுங்குவிதியின் (உ) என்னும் பந்தியின் கீழ் அத்தகைய ஆளுக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் கொடுப்பனவைக் கழித்த பின்னர், புராதனப் பொருட்கள் வெகுமதி நிதியத்திலிருந்து வெகுமதியொன்றாகச் செலுத்தப்பட வேண்டிய தொகையைத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், அவரது கையொப்பத்தின் கீழும், தேதியுடனும் கொடுப்பனவுக்கான கட்டளையொன்றை ஆக்கும் போது அத்தகைய தீர்மானத்துக்கான காரணங்களைக் கொடுத்தலும் வேண்டும்.

10. புராதனப் பொருட்கள் வெகுமதி நிதியத்திலிருந்து இவ் வொழுங்கு விதியின் கீழ் வெகுமதியொன்றைப் பெறுகின்ற எவரேனும் ஆள், அவ்வெகுமதியை ஏற்றுக் கொண்டமைக்காக, இரு சாட்சிகளின் முன்னிலையில், இதற்கான இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக் கப்பட்ட விண்ணப்பத்தில் தோதான இடத்தில் தமது கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

11. இவ்வொழுங்கு விதியில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப் படுத்தினாலொழிய -

''வலுவுறுத்தல் அலுவலர்'' என்பது, தொல்பொருளியல் பணிப்பாளர் தலைமையதிபதியினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள் என்று பொருளாகும்;

''உள்ளூரதிகார சபை'' என்பது, ஏதேனும் மாநகரத சபை, நகர சபை அல்லது ஏதேனும் பிரதேச சபை என்று பொருளாகு மென்பதுடன், அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப் பட்ட, புரியப்பட்ட அல்லது நிறைவேற்றப்பட்ட தத்துவங்களுக் கும் கடமைகளுக்கும், பணிகளுக்கும் நேரொத்தவையாகவுள்ள அல்லது அவற்றையொத்த தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கு, புரிவதற்கு அல்லது நிறை வேற்றுவதற்கு ஏதேனும் சட்டத்தனால் அல்லது சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும்.

*(ஒழுங்கு விதி 3)*

### முதலாம் அட்டவணை

| அலுவலர்களின் வகுதிகள் | 46 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நியதிகளின்படி நீதிமன்றத்தினால் திணைக் களத்துக்குக் குறித் தொதுக்கப்பட்ட குற்றப் பணங்களிலிருந்து செலுத்தப்பட வேண்டிய நூற்று வீதம் |
|---|---|
| (அ) பிரதான பொலிசுப் பரிசோதகர் அல்லது ஒரு பிரதான பரிசோதகர் பதவி வரிசைக்குக் குறைந்த பதவியிலுள்ள எவரேனும் அலுவலர் அல்லது புராதனப் பொருளொன்றை ஏற்றுமதி செய்வதனைக் கண்டுபிடிப்பதில் சம்பந்தப்பட்ட சுங்கத் திணைக்களத்தின் எவரேனும் அலுவலர் | 40% |
| (ஆ) ஒரு பதவிநிலை அலுவலர் பதவி வரிசைக்குக் குறைந்த பதவியிலுள்ளவரும், தொல்பொருளியல் திணைக் களத்தைச் சேர்ந்தவருமான எவரேனும் ஊழியர் | 05% |
| (இ) ஒரு பதவி நிலை அலுவலர் பதவி வரிசைக்குக் குறைந்த பதவியிலுள்ளவரும், பகிரங்க சேவையை அல்லது ஒரு நியதிச் சட்ட முறையான குழுவை அல்லது உள்ளூரதிகார சபையைச் சேர்ந்தவருமான எவரேனும் ஊழியர் | 15% |
| (ஈ) எவரேனும் தகவலளிப்பவர் | 30% |
| (உ) தொல்பொருளியல் திணைக்களத்தின் உதவிச் சட்ட அலுவலர் உட்பட அத்தகைய திணைக்களத்தின் சட்ட அலுவலர்களும் எவரேனும் வலுவுறுத்தல் அலுவலரும் | 10% |

### இரண்டாம் அட்டவணை

*(ஒழுங்கு விதி 10)*

புராதனப் பொருட்கள் வெகுமதி நிதியத்தின் கீழ் வெகுமதியொன் றுக்கான பற்றுச்சீட்டு :-

(அ) விண்ணப்பகாரரின் முழுப்பெயர் :
(ஆ) தான் புரி தொழில் :
(இ அலுவலக முகவரி, ஏதேனுமிருப்பின் :
(ஈ) தனிப்பட்ட முகவரி:
(உ) விதந்துரைக்கப்பட்ட தொகை :
(ஊ) அதிகாரமளிக்கப்படாத அல்லது சட்டப்படியற்ற உடைமையிலுள்ள புராதனப் பொருட்களைக் கண்டுபிடிப்பதற்கு அல்லது மீட்டுப்பெறுவதற்கு அல்லது புராதனப் பொருட்களைக் கொண்டுள்ள இடங்களைப் பாதுகாப்பதற்கு மற்றும் புராதனப் பொருட்களைப் பாதுகாப்பதற்கு இட்டுச் செல்கின்ற தகவலை வழங்கியமைக்காக அவர் ஏதேனும் வெகுமதியைப் பெற்றுள்ளாராவென்பதைக் கூறி, பெறுபவரினால் செய்யப்பட்ட வெளிப் படுத்துகை.

......................................................,
வெகுமதி பெறுபவரின் கையொப்பம்.

தேதி:

(சாட்சிகளின் கையொப்பம்):
சாட்சிகள் :

1. ............................................ 2. ..............................................

5-91

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2010.01.21 ஆந் திகதி நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்த தாவது -

''1 பிரசித்த நொத்தாரிசு திரு. எல். எஸ். ஆத்தாவுத அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.04.09 ஆந் திகதிய இலக்கம் 6235 கொண்ட ஈட்டு முறியின் பேரில் இல. 210, அங்கொடை, மெதவல, ஹாரிஸ்பத்து என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. பள்ளேகெதர கனிஸ்க பிரியந்த ஜயரத்ன, இல. 10, கோனிகொட, மெதவல, ஹாரிஸ்பத்து என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி ராஜபக்ஸ வெலகெதர துலாரி திஸ்னா ரணதுங்க அல்லது ராஜபக்ஸ வெலகெதர துலாரி ரணதுங்க என்பவர்களினால் முதலும் 03.11.2009 ஆந் திகதி வரையிலான வட்டியுமாக ஏழு இலட்சத்து அறுபத்தோராயிரத்து எழுநூற்று அறுபத்து நான்கு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 7,61,764.57) அத்துடன் ஆறு இலட்சத்து ஆறாயிரத்து அறுநூற்று எழுபத்திரண்டு ரூபா (ரூ. 6,06,672) 04.11.2009 ஆந் திகதி தொடக்கம் முழுப் பணமும் முற்றாகச் செலுத்தி முடிக்கும் வரை ஆண்டுக்கு பதின்நான்கு (14%) வீதத்திலான வட்டியும் இலங்கை வங்கிக்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் செலுத்த வேண்டியுமுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட பிரசித்த நொத்தாரிசு திரு. எல். எஸ். ஆத்தாவுத அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.04.09 ஆந் திகதிய இலக்கம் 6235 கொண்ட ஈட்டு முறியின் பேரில் வருதியாகவுள்ள ஏழு இலட்சத்து அறுபத்தோராயிரத்து எழுநூற்று அறுபத்து நான்கு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 7,61,764.57) அத்துடன் 2009.11.04 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்துள்ள, இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலக்கம் 24, ரொறிங்ரன் ரோட், கண்டி என்னும முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் சமரவிக்ரம அவர்களுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கு மிணங்கவும் இத்தீர்மானம் தொடர்பான அறிவித்தலை இலங்கை வங்கி, கண்டி உயர்தரக் கிளையின் பிரதான முகாமையாளரினால் பிரசுரிப்பதற்கு மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

### அட்டவணை

1. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், தும்பனை, உடபலாத்த கிழக்கு கோறளை, கிரிஹாகமவில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஜே. பண்டார அவர்களினால் 09.09.2007 ஆந் திகதி உட்பிரிவு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட (2007.06.13 ஆந் திகதிய 3280 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 1 இன் உட்பிரிவான) 3280 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1D எனக் காட்டப்பட்டுள்ள, ''மொறகல்லஹேன'' என்றழைக்கப்படும் காணியின் பாகமொன்றாகிய, வடமேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தின் துண்டு 1F உம் ; வடகிழக்கில் : தபலே வத்தயும் (B) பொக்காவலவிலிருந்து கண்டிக்குச் செல்லும் பெருந்தெருவிலிருந்து வரும் 20 அடி அகலமுள்ள ரோட்டும் ; தென்கிழக்கில் : மேற்கூறிய வரைபடத்தின் துண்டு 1C உம் ; தென்மேற்கில் : 4275 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 1B உம் எல்லைகளாகக் கொண்ட, ஒரு றூட் (0ஏ. 1றூ. 0பே.) விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணி முழுவதும் அதற்குள் உள்ள அனைத்துமாகும்.

2. மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், தும்பனை, உடபலாத்த கிழக்கு கோறளை, கிரிஹாகமவில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஜே. பண்டார அவர்களினால் 09.09.2007 ஆந் திகதி உட்பிரிவு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட (2007.06.13 ஆந் திகதிய 3280 ஆம் இலக்கவரைபடத்தின் துண்டு 1 இன் உட்பிரிவான) 3280 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1F எனக் காட்டப்பட்டுள்ள, ''மொறகல்லஹேன'' என்றழைக்கப்படும் காணியின் பாகமொன்றாகிய, வடக்கில் : தபலே வத்தயும் ; தென்கிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தின் துண்டு 1D உம்; தென்மேற்கில் : 4225 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 1A யின் ஒரு பாகமும் ; வடகிழக்கில் : தபலே வத்தயும் எல்லைகளாகக் கொண்ட ஒரு ஏக்கர் இருபத்தொன்பது தசம் எட்டு பூச்சியம் பேர்ச்சஸ்கள் (1ஏ. 0றூ. 29.80பே.) விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள முழுக் காணியும் அதற்குள் அமைந் துள்ள அனைத்துமாகும்.

மேற்குறிப்பிட்ட உட்பிரிவு செய்யப்பட்ட துண்டு 1D உம் 1F உம் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் பாகமொன்றாகும் :-

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், தும்பனை, உடபலாத்த கிழக்கு கோறளை, கிரிஹாகமவில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஜே. பண்டார அவர்களால் தயாரிக்கப்பட்ட 2007.06.13 ஆந் திகதிய 3280 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள, ''மொறகல்லஹேன'' என்றழைக்கப்படும் காணியின் பாகமொன்றாகிய, வடக்கில் : தபலே வத்தவும், (B) பொக்காவல அறம்பேகொட பெருந்தெருவிலிருந்து வரும் 20 அடி அகலமுள்ள ரோட்டும் ; தெற்கில் : 4275 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 1B உம் ; மேற்கிலும் வடக்கிலும் : 4275 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 1A யின் மிகுதித் துண்டும் எல்லைகளாகக் கொண்ட இரண்டு ஏக்கர் முப்பத்துநான்கு பேர்ச்சுகள் (2ஏ. 0றூ. 34பே.) விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணி முழுவதும் அதற்குள் உள்ள பயிர்களும் மற்றும் அனைத்துமாகும். இது கண்டி காணிப்பதிவகத்தில் K 381/123 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ஈ. எம். உபதிஸ்ஸ பண்டார,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
உயர்தரக் கிளை,
கண்டி.

5-94

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

*2010.01.21 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்த தாவது -*

*"1 பிரசித்த நொத்தாரிசு திரு. டி. ஆர். ஜீ. ஜினசேன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.03.31 ஆந் திகதிய இலக்கம் 1815 கொண்ட ஈட்டு முறியின் பேரில் இல. 94, ஸ்ரீ சுதர்ஸனாராம மாவத்தை, நாகஸ்தன்னை, கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. விதான ஆரச்சிலாகே பிரசன்ன பெரேரா, திருமதி காடியே ஆரச்சிகே புஸ்பமாலி விஜேவிக்ரம என்பவர்களினால் முதலும் (நிரந்தர மேலதிகப் பற்று எல்லையை மீறிப் பெறப்பட்ட மூன்று இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து நூற்றி ஐம்பத்தாறு ரூபா ஐம்பத்தெட்டு சதம் (ரூ. 3,52,156.58) தவிர்த்து) 03.11.2009 ஆந் திகதி வரையிலான வட்டியுமாக பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து எண்ணூற்று ஐம்பத்திரண்டு ரூபா நாற்பது சதம் (ரூ. 19,92,852.40) அத்துடன் பதினைந்து இலட்சம் ரூபா (ரூ. 15,00,000) ரூபாவிற்கு 04.11.2009 ஆந் திகதி தொடக்கம் முழுப்பணமும் முற்றாகச் செலுத்தி முடிக்கும் வரை ஆண்டுக்கு பதினைந்து (15%) வீதத்திலான வட்டியும் இலங்கை வங்கிக்கு கூட்டாகவும் தனித்தனியாகவும் செலுத்த வேண்டியுள்ளது.*

*2. மேற்குறிப்பிட்ட பிரசித்த நொத்தாரிசு திரு. டி. ஆர். ஜீ. ஜினசேன அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008.03.31 ஆந் திகதிய இலக்கம் 1815 கொண்ட ஈட்டு முறியின் பேரில் வருதியாகவுள்ள பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து எண்ணூற்று ஐம்பத்திரண்டு ரூபா நாற்பது சதம் (ரூ. 19,92,852.40) (நிரந்தர மேலதிகப் பற்று எல்லையை மீறிப் பெறப்பட்ட மூன்று இலட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து நூற்றி ஐம்பத்தாறு ரூபா ஐம்பத்து எட்டு சதம் (ரூ. 3,52,156.58) நீங்கலாக) அத்துடன் 04.11.2009 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடக்கூடிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்துள்ள, இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலக்கம் 24, ரொறிங்ரன் ரோட், கண்டி என்னும முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் சமரவிக்ரம அவர்களுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்குமிணங்கவும் இத்தீர்மானம் தொடர்பான அறிவித்தலை இலங்கை வங்கி, கண்டி உயர்தரக் கிளையின் பிரதான முகாமையாளரினால் பிரசுரிப்பதற்கு மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."*

### அட்டவணை

*மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைக்குள் நாகஸ்தன்னையில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. நானாயக்கார அவர்களால் தயாரிக்கப்பட்ட 1992, யூலை 12 ஆந் திகதிய இலக்கம் 1106A கொண்ட வரைபடத்தில் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். டபிள்யூ. ஆரியவங்ச அவர்ளகால் தயாரிக்கப்பட்ட 491 ஆம் இலக்க வரைபடத்தின் நாலாம் துண்டின் உட்பிரிவான) துண்டு 3 எனக் காட்டப்பட்டுள்ள, "நாகஸ்தன்னை வத்த" என்றழைக்கப்படும் காணியின் பாகமொன்றாகிய - வடக்கில் : 1076 ஆம் இலக்க வரைபடத்தின் 3 ஆந் துண்டும்; கிழக்கில்: நாகஸ்தன்னைக்குச் செல்லும் ரோட்டும் ; தெற்கில் : அதே காணியின் மிகுதித் துண்டும் ; மேற்கில் : சுதுஹும்பொல விஹாரை ஒழுங்கையை எல்லைப்படுத்தும் நீரோடையும் எல்லைகளாகக் கொண்ட பன்னிரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 12பே.) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணித்துண்டு முழுவதும் அதற்குள் அமைந்துள்ள கட்டடங்கள், பயிர்கள் மற்றும் அனைத்துமாகும். இது கண்டி காணிப் பதிவகத்தில் ஏ 327/73 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,*

*ஈ. எம். உபதிஸ்ஸ பண்டார,*
*பிரதான முகாமையாளர்.*

*இலங்கை வங்கி,*
*உயர்தரக் கிளை,*
*கண்டி.*

*5-95*

---

## நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் (பதிவு இல. PQ 118) பணிப்பாளர் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

*அக்பர் ஹாஜி அன்வர்*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதி களின்படி பின்வரும் தீர்மானம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் (பதிவு இல. PQ 118) பணிப்பாளர் சபையால் 2009, ஒற்றோபர் 30 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*"இல. 27, அல்பிறட் பிளேஸ், கொழும்பு 03 என்னும் முகவரியைச் சேர்ந்த அக்பர் ஹாஜி அன்வர் (இதனகத்துப் பின்னர் ஈடுவைத்தவர் எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டிலானி சஞ்ஜீவிகா சூரியாராச்சி அத்தாட்சிப்படுத்திய 2004, திசெம்பர் 17 ஆந் திகதி கொண்ட 676 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 02, யூனியன் பிளேஸ், 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் இல. 76, யோர்க் வீதி, கொழும்பு 01) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ யின் சார்பில் (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்டது) மேற்படி ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளார். ஆதலாலும்,*

சொல்லப்பட்ட ஈடுவைத்தவர் மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன்வசதிகளின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர் ஆதலால், இப்பொழுது 31.03.2009 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்படி முறியின் மீது ஒரு கோடியே இருபது இலட்சத்து பதினெட்டாயிரத்து ஐநூற்று ஐம்பத்தாறு ரூபா நாற்பத்தாறு சதம் (ரூ. 1,20,18,556.46) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ க்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலாலும்,

ஒரு கோடியே இருபது இலட்சத்து பதினெட்டாயிரத்து ஐநூற்று ஐம்பத்தாறு ரூபா நாற்பத்தாறு சதம் (ரூ. 1,20,18,556.46) 31.03.2009 ஆந் திகதியன்றுள்ளவாறு வீடமைப்புக் கடன் மீது நிலுவையிலிருக்கும் முதல் ஒரு கோடியே ஒன்பது இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எண்பத்தேழு ரூபா முப்பத்தாறு சதத்தின் மீது (ரூ. 1,09,56,087.36) 01.04.2009 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 31.75% சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச் சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் உத்தரவு பெற்ற ஏலதாரர் திரு. இஹலகே கிறிஸ்டி அலெஸ்டர் பெரேரா என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

ராஜகிரிய, லேக் ட்ரைவ், 115, 22/5 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ.பீ. தொடன்வெல தயாரித்த 1997, மே 24 ஆந் திகதி கொண்ட 2627 ஆம் இலக்க கூட்டாட்சியாதன வரைபடத்தில் கட்டப்படுவதுமான கோபுரம் A என்பதில் இருபத்திரண்டாம் மாடியில் கூறு 1A/F22/U5 என அடையாளமிடப்பட்ட வதிவிட இருப்பிடக்கூறு முழுவதும் மூன்று (3) படுக்கையறைகள், வரவேற்பறை, சாப்பாட்டறை, இரண்டு (2) குளியலறைகள், நீர்த்தொட்டி, சமையலறை, பயன்பாட்டறை, சாலை என்பன அடங்கியது. இக்கூறு எல்லைகளாக வடக்கில் : இக்கூறுக்கும் CE22A (பொதுக் கூடம்), கூறு 1A/F22/U4 மற்றும் மேலேயுள்ள CE 25 இன் முகப்பு என்பவற்றைப் பிரிக்கும் சுவரின் மத்தி ; கிழக்கில் : இக்கூறுக்கும் CE 40 க்கும் மேலேயுள்ள CE 25 க்கும் இடையிலான சுவரின் மத்தி; தெற்கில் : இக்கூறுக்கும் CE25க்கும் இடையிலான சுவரின் மத்தி; மேற்கில் : இக்கூறுக்கும் மேலேயுள்ள CE 25 இன் முகப்பிற்கும் CE 22A (பொதுக்கூடம்) என்பதற்கும் இடையிலான சுவரின் மத்தி; முகட்டில் : இக்கூறின் மேல் கூறு 1A/F23/U3 என்பதன் மேலுள்ள கொங்கிறீட் தரையின் மத்தி, அடித்தளத்தில் கூறு 1A/F2/U5 என்பதற்கு மேலேயுள்ள இக்கூறின் கொங்கிறீட் தரையின் மத்தி என்பன அமைந்துள்ளன. மேற்படி 2627 ஆம் இலக்க கூட்டாட்ச்சியாதன வரைபடத்திற்கிணங்க இதன் பரப்பளவு நூற்று இருபத்தேழு தசம் எட்டு சதுர மீட்டர் (127.8 ச.மீ.) இது கல்கிசை காணிப்பதிவகத்தில் Con. M 27/28 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி 2627 ஆம் இலக்க கூட்டாட்சியாதன வரைபடத்தில் CE33 எனக் காட்டப்படும் அடித்தளக் கார் தரிப்பிடத்திலுள்ள தரிப்பிட ஒதுக்கிடமொன்றாகப் பிரத்தியேகமாகப் பயன்படுத்தும் உரிமை.

மேலே விவரிக்கப்படும் மேற்படி சுயேச்சையான வதிவிட இருப்பிடக்கூறைச் சேர்ந்த பொது வசதிகளின் கட்டிடத்திற்குப் பிரித்தொதுக்கப்பட்ட மொத்தம் 16,774 பங்குகளுள் பிரிபடாத 61 பங்குகளுடனும் அத்துடன் மேற்படி 676 ஆம் இலக்க உறுதியில் நான்கு விவரிக்கப்படும் கோபுரம் ''A'' என்பதற்கு ஏற்புடைத்தான பொது வசதிகளுடனும் சேர்த்து.

மேற்படி கூறு 1A/F22/U5 பின்வரும் காணியில் அமைந்துள்ள கூட்டாட்சியாதனக் கட்டிடமாகும்.

உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. பீ. தொடன்வெல தயாரித்த 1997, மே 24 ஆந் திகதிகொண்ட 2627 ஆம் இலக்க கூட்டாட்சியாதன வரைபடத்தில் துண்டு 1 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

5-47

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2010.01.21 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது -

''1 பிரசித்த நொத்தாரிசு எல். எஸ். ஆத்தாவுத அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.10.30 ஆந் திகதிய இலக்கம் 5325 கொண்ட ஈட்டு முறியின் பேரில் இல. 115/3, புஸ்பதான கடைத் தொகுதி, டி. எஸ். சேனாநாயக்க வீதி, கண்டி என்னும் முகவரியில் அமைந்துள்ள ஒன்லைன் கொம்பியூட்டர் சிஸ்ரம் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற நிறுவனத்தினால் முதலும் (நிரந்தர மேலதிக பற்று எல்லையை மீறிப் பெறப்பட்ட நான்கு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து நாநூற்று தொண்ணூற்று ஒரு ரூபா ஐம்பத்து மூன்று சதம் (ரூ. 4,68,491.53) தவிர்த்து 03.11.2009 ஆந் திகதி வரையிலான வட்டியுமாக பதினேழு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து முந்நூற்று நாற்பத்தொரு ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூ. 17,93,341.54) அத்துடன் பத்து இலட்சம் ரூபா (ரூ. 10,00,000) ரூபாவிற்கு 04.11.2009 ஆந் திகதி தொடக்கம் முழுப்பணமும் முற்றாகச் செலுத்தி முடிக்கும் வரை ஆண்டுக்கு பதினைந்து (15%) வீதத்திலான வட்டியும் இலங்கை வங்கிக்கு செலுத்த வேண்டியுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட பிரசித்த நொத்தாரிசு எல். எஸ். ஆத்தாவுத அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.10.30 ஆந் திகதிய இலக்கம் 5325 கொண்ட ஈட்டு முறியின் பேரில் வருதியாகவுள்ள பதினேழு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து முந்நூற்று நாற்பத்தொரு ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூ. 17,93,341.54) (நிரந்தர மேலதிகப் பற்று எல்லையை மீறிப் பெறப்பட்ட நான்கு இலட்சத்து அறுபத்தெட்டாயிரத்து நாநூற்று தொண்ணூற்று ஒரு ரூபா ஐம்பத்து மூன்று சதம் (ரூ. 4,68,491.53) நீங்கலாக) அத்துடன் 04.11.2009 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை

மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்துள்ள, இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலக்கம் 24, ரொறிங்ரன் ரோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் சமரவிக்ரம அவர்களுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கு மிணங்கவும் இத்தீர்மானம் தொடர்பான அறிவித்தலை இலங்கை வங்கி, கண்டி உயர்தரக் கிளையின் பிரதான முகாமையாளரினால் பிரசுரிப்பதற்கு மேற்குறிப்பிட்ட இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பாத்ததும்பர, உடகம்பஹா கோறளை, கெங்கல்லவில் அமைந்துள்ள, அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்படட 1985.07.24 ஆந் திகதிய பிபி மஹா 4376 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 44 எனக் காட்டப்பட்டுள்ள ''குண்டசாலை வத்த'' என்றழைக்கப்படும் காணியின் பாகமொன்றாகிய வடக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தின் துண்டு 46 உம் , 43 ஆம் ; கிழக்கில் : துண்டு 43 உம் 46 உம் ; தெற்கில் : 46, 45 ஆம் துண்டுகளும்; மேற்கில் : துண்டு 45 உம் , 24 உம் எல்லைகளாகக் கொண்ட பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று எட்டு ஹெக்டயார் (0.038 ஹெக்டயார்) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணி முழுவதும் அதற்குள் அமைந்துள்ள அனைத்துமாகும். இது கண்டி காணிப் பதவிகத்தல் எல்டிஓஈ 776/34 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இக்காணி புதிதாக அளக்கப்பட்டு பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:-

மேற்கூறியவாறு கெங்கல்லவில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். சீ. நாவலகே அவர்களால் தயாரிக்கப்பட்ட 2006.01.01 ஆந் திகதிய 554 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள ''குண்டசாலை வத்த'' என்றழைக்கப்படும் காணியின் ஒரு பாகமாகிய; வடக்கில் : 4376 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 43 உம் ; கிழக்கில் : மேற்குறிப்பிட்ட 4376 ஆம் இலக்க வரைபடத்தின் 46, 45 ஆந் துண்டுகளும் ; தெற்கில் : இலக்கம் 4376 கொண்ட வரைபடத்தின் 45 ஆந் துண்டும் ; மேற்கில் : 4376 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 145 எனக் காட்டப்பட்டுள்ள வீடுகளிற்குச் செல்லும் பாதையும் எல்லைகளாகக் கொண்ட பதினைந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15பே.) விஸ்தீரணமுடைய, பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதற்குள் உள்ள அனைத்துமாகும்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

ஈ. எம். உபதிஸ்ஸ பண்டார,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
உயர்தரக் கிளை,
கண்டி.

5-96

### இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்

2010.02.18 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது -

''பிரசித்த நொத்தாரிசு ஜீ. சீ. பீ. திலக்கரத்ன அத்தாட்சிப் படுத்திய 2007.11.14 ஆந் திகதியிட்ட முறி இல. 3263 இன் பேரில் இல. 39/3, போதிருக்காராம ரோட், கல்பொரெல்ல, களனிய என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. நாலக்க ஜயமான்ன என்பவரிடமிருந்து கடனுக்காக முதலும் 2010.01.12 ஆந் திகதி வரை வட்டியையும் ஏழு இலட்சத்து பதினான்காயிரத்து நூற்று எழுபத்தேழு ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 7,14,177.19) அத்துடன் ஆறு இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து ஆறுநூற்று இருபத்துநான்கு ரூபா ஐம்பத்து மூன்று சதம் (ரூ. 6,22,624.53) ஆண்டுக்கு இருபத்தைந்து தசம் ஏழு ஐந்து (25.75%) வீதத்தில் 2010.01.12 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட முறி இல. 3263 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஏழு இலட்சத்து பதினான்காயிரத்து நூற்று எழுபத்தேழு ரூபா பத்தொன்பது சதம் (ரூ. 7,14,177.19) அத்துடன் 2010.01.13 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித கருணாரத்னவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி கிரிபத்கொடை கிளை, கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோறளை, அதிகாரி பற்றுவில் களனிய பிரதேச சபை எல்லைகளுள் கல்பொரெல்ல கிராமத்தில் அமைந்த போதிருக்காராம ரோட் வரிமதிப்பிலக்கம் 39/3 ஐக் கொண்ட ''கொரககஹவத்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பி. பீ. கங்கொடவில தயாரித்த 1985, பெப்புருவரி 01 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 4657 இல் விபரித்த துண்டு 3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : கே. எச். செனவிரத்னவின் கொரககஹவத்தயும் ; கிழக்கில் : எச். சுகததாசவின் கொரககஹவத்தயும் ; தெற்கில் : எச். சுகததாசவின் கொரககஹவத்தயும் துண்டு 4 (றோட்) ; மேற்கில் : துண்டு 2 உம் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4657 இன்படி பதினைந்து தசம் ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15.6பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும். இது கொழும்பு காணிப்பதிவகத்தில் C 559/248 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காணித்துண்டு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம்.என்.டி.எஸ்.த சில்வா தயாரித்த 1998, ஓகத்து 10 ஆந் திகதியிட்ட அண்மைய அளவை வரைபடம் இல. 4257 இன்படி பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது:-

மேற்குறிப்பிட்டவாறு கல்பொரெல்ல கிராமத்தில் அமைந்ததும் போதிருக்காராம ரோட் வரிமதிப்பிலக்கம் 39/3 ஐக் கொண்ட ''கொரககஹவத்த'' என அழைக்கப்படும் காணி மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4257 இல் விபரித்த துண்டு A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : சுவர்ணா ஜயவர்தனயின் காணியும் ; கிழக்கில் : சுகததாச ரொட்ரிகோவின் காணியும் ; தெற்கில் : 12 அடி அகலப்பாதையும் (வரைபடம் இல. 4657 இல் துண்டு 4) ; மேற்கில் : சித்ரா ரொட்ரிகோ றோட்டும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4257 இன்படி பதினைந்து தசம் ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 15.6பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடம் மற்றும் சகலதும் ஆகும்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

டபிள்யூ. பீ. கோணார
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
கிரிபத்கொடை கிளை.

5-97

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப் பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்*

2009.05.14 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது -

"பிரசித்த நொத்தாரிசு எஸ். ஆர். த சில்வா அத்தாட்சிப்படுத்திய 2006.08.07ஆந் திகதியிட்ட ஈட்டுமுறி இல. 2419 இன் பேரில் இல. 21/15, புனித அந்தோனியார் ரோட், வெலிசர, ராகம என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. அத்தனகொட கங்கானமலாகே நந்தன பாலித்த மற்றும் திருமதி வீரதுங்க ஆரச்சிகே தொனா அஞ்சலா சிறிலானி ஆகியோரிடமிருந்து கடன் கணக்குக்காக முதலும் 2008.07.10 வரை வட்டியும் ஆறு இலட்சத்து தொண்ணூற்றோ ராயிரத்து தொளாயிரத்து மூன்று ரூபா முப்பது சதம் (ரூ. 6,91,903.30) அத்துடன் கடன் கணக்குக்காக ஐந்து இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 5,50,000) ஆண்டுக்கு இருபது தசம் ஏழு ஐந்து (20.75%) வீதத்தில் 2008.10.11 தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

மேற்குறிப்பிட்ட முறி இல. 2419 இன் மீது வருமதியாக உள்ள மேற்குறிப்பிட்ட ஆறு இலட்சத்து தொண்ணூற்றோராயிரத்து தொளாயிரத்து மூன்று ரூபா முப்பது சதம் (ரூ. 6,91,903.30) அத்துடன் 2008.07.11 தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த T & H ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித கருணாரத்னவுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 21 ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி வெலிசரக்கிளை, கிளை முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

**விற்பனைக்குரிய ஆதனம்**

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு பதிவுப் பிரிவு, கம்பஹா மாவட்டத்தில் அலுத்குரு கோரளை ராகம்பற்றுவில் (ஹெந்தல உப அலவலகம்) வத்தளை பிரதேச சபை எல்லைகளுக்குள் கெரவலபிட்டிய கிராமத்தில் பொகுன றோட்டில் அமைந்த பொகுன ரோட் வரிமதிப்பிலக்கம் 32 ஐக் கொண்ட ''தவட்டகஹலந்த'' என அழைக்கப்படும் காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. சீ. எம். எஸ். விமலரத்ன தயாரித்த 1994, பெப்புருவரி 11 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 31A/1994 இல் விபரித்த துண்டு 2B3 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 31A/1994 இல் துண்டு 2B2 உம் ; கிழக்கில் : கே. ஏ. ஜே. ரூபிகா பெரேராவின் காணியும் ; தெற்கில் : பொக்குன ரோட்டும்; மேற்கில் : பாதைக்கு ஒதுக்கப்பட்டிருப்பதும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 31A/1994 இன் படி பதின்மூன்று தசம் ஆறு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.65பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் வளர்பவையும் ஆகும். இது கொழும்பு காணிப்பதிவகத்தில் B 779/238 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

டபிள்யூ. டபிள்யூ. வீ. டபிள்யூ. எம். குணதாச,
கிளை முகாமையாளர்.

இலங்கை வங்கி,
வெலிசறைக் கிளை.

5-98

---

**மக்கள் வங்கி-காலி மஹவீதிய**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச்

சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் மக்கள் வங்கிப் பணிப் பாளர் சபையால் 2009.10.30 ஆந் திகதி பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படு கின்றது :-

"காலி பிரசித்த நொத்தாரிசு எம். ஏ. டீ. எம். பீரிஸ் என்பவரால் 2001.02.02 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய 3488 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பிரகாரம் கொடுப்பனவில் வீரசூரிய மஹவிதானகே ரன்ஜித் நிஹால் என்பவர் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது மேற்படி ஈட்டுமுறியின் மீது இரண்டு இலட்சத்து நாற்பத்துமூவாயிரத்து இருநூறு ரூபா பதினேழு சதம் (ரூ. 2,43,200.17) மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால் 2009.04.01 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு 25 வீதப்படி இரண்டு இலட்சத்து நாற்பத்து மூவாயிரத்து இருநூறு ரூபா பதினேழு சதம் (ரூ. 2,43,200.17) பணம் ஏலவிற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும், மக்கள் வங்கிச் சட்டத்தின் (29L) 29எல் பிரிவின்கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து இரண்டு இலட்சத்து நாற்பத்துமூவாயிரத்து இருநூறு ரூபா பதினேழு சதம் (ரூ. 2,43,200.17) பணம் அறவிடுவதற்காக அதிகாரம்பெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 3488 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவே தெற்கு மலலகமயில் அமைந்துள்ள செல்லஜாவத்த என்ற காணியின் இலக்கம் ஏ என்ற காணித்துண்டுக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. டீ. ஏ. குணசேகர என்பவரால் 1994.12.28 ஆந் திகதி அளந்து தயாரித்த இலக்கம் 1389 என்ற வரைபடத்தின் பிரகாரம் ஏ என்ற காணித்துண்டுக்கான எல்லைகள் - வடக்கு : மஹவத்தயும்; கிழக்கிற்கு மற்றும் தெற்கிற்கு : அலுகெதர வத்தயும் ; மேற்கிற்கு : வீதி மற்றும் மஹவத்தயும் இதன் எல்லைகளாகும். இந்த எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் இருபத்துமூன்று தசம் எட்டு ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 23.87பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்திருக்கும் கட்டடங்கள், மரம், மட்டைகள் உட்பட அனைத்தும் ஆகும்.

இக்காணி காலி மாவட்ட காணிப்பதிவகத்தில் இலக்கம் டீ 779/86 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட மலலகம செல்லஜாவத்தயில் அமைந்திருக்கும் மஹவத்த அத்தரதுவ படதுருகேய் கொரடுவ என்ற காணிக்கான எல்லைகள் - வடக்கு : மஹவத்தயும் ; கிழக்கிற்கு : மலகலவத்த மற்றும் அலுகெதரவத்தயும் ; தெற்கிற்கு : கின்தொடகேவத்தயும் ; மேற்கிற்கு : அன்தேனியாவத்த வத்த இதன் எல்லைகளாகும். இந்த எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் மூன்று றூட் (0ஏ. 3றூ. 0பே.) விசாலம் கொண்ட இக்காணி எல்லாக் காரியங்களுக்காகவும் பயன்டுத்துவதற்கு வீதியின் உரிமையும் உண்டு.

இக்காணி காலி மாவட்ட காணிப் பதிவகத்தில் இலக்கம் டீ 658/20 கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்சன் வீதி,
காலி.

5-168

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(அநுராதபுரம் கிளை) - மிரிகல் பெடிகே ஜயசிரி ஆனந்த

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் .-

''மிரிகல் பெடிகே ஜயசிரி ஆனந்த கடப்பாடுடையவராக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், அநுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு ஏ. வி. ஏ. திசாநாயக்கவினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2005, செத்தெம்பர் 13 ஆந் திகதியிடப்பட்ட 3909 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும் 2010, சனவரி 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஒரு இலட்சத்து நான்காயிரத்து தொளாயிரத்து இருபத்திரண்டு ரூபா நாற்பத்தெட்டு சதம் (ரூபா 1,04,922.48) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்டதுமான 3909 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 1,04,922.48 பணத்தொகையை 2010, பெப்புருவரி 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யு. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், நுவரகம் பலாத்தயில் உள்ள கனதர கோறளவில் உள்ள அநுராதபுரம் மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட கிராம சேவகர் பிரிவு இலக்கம் 23ஈ இன் அநுராதபுரம் புதிய நகரத்தில் உள்ள கட்டம் II (புதிய பேரூந்து நிலையம்) உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ரி. பி. ஆரியசேனவினால் தயாரிக்கப்பட்ட 20.09.1993 ஆந் திகதியிடப்பட்ட 47/93 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 1 (நில அளவை நாயகத்தினால் செல்லத்தக்கதாக்கப்பட்ட இறுதி நகர வரைபட இலக்கம் ஏ3 இன் காணித்துண்டு 2790 ஆகும்) என அடையாளம் இடப்பட்ட கும்பிச்சன்குளம என அழைக்கப்படும் பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : சொல்லப்பட்ட எப். யூ. பீ. ஏ 3 இன் காணித்துண்டு 2780 ; கிழக்கு : எப். யூ. பீ. ஏ 3 இன் காணித்துண்டு 2791 ; தெற்கு : எப். யூ. பீ. ஏ3 இன் 2793 ஆம் இலக்க காணித்துண்டு; மேற்கு : சொல்லப்பட்ட எப். யூ. பீ. ஏ3 இன் காணித்துண்டு 2789. அத்துடன் அநுராதபுரம் காணிப் பதிவகத்தில் ஏ 359/235 கோர்வையின் கீழ் பதிவு செய்யப்பட்ட இரண்டு தசம் நான்கு ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ.0றூ. 2.49பே.) அல்லது ஹெக்டேயர் பூச்சியம் தசம் பூச்சியம் பூச்சியம் ஆறு மூன்று (ஹெக். 0.0063) அத்துடன் புதிய பேரூந்து இடத்தின் இலக்க 382/24 என அடையாளம் இடப்பட்டுள்ள வர்த்தக கட்டடம், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட ஆதனம்.

உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. வி. சோமபாலவினால் தயாரிக்கப்பட்ட 03.02.2002 ஆந் திகதியிடப்பட்ட 3845 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள முன்சொல்லப்பட்ட காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்ட மீள்நிலஅளவை செய்யப்பட்டதன் பின்னரான எல்லைகள் - வடக்கு : எப். யூ. பீ. ஏ3 இல் உள்ள காணித்துண்டு 2780 மற்றும் வீதி ; கிழக்கு : எப்.யூ.பீ.ஏ3 இல் உள்ள காணித்துண்டு 2791 ; தெற்கு : எப்.யூ. பீ. ஏ3 இல் உள்ள காணித்துண்டு 2793 மற்றும் வீதி; மேற்கு : எப். யூ. பீ. ஏ3 இல் உள்ள காணித்துண்டு 2789. அத்துடன் இரண்டு தசம் நான்கு ஒன்பது றூட்ஸ் (0ஏ. 2.49றூ. 0பே.) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் பூஜ்யம் ஆறு மூன்று ஹெக்டயர்கள் (0.0063 ஹெக்.) அத்துடனான கட்டடம், மரங்கள், பயிர்ச்செய்கை மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு. (சட்டம்) /சபைச் செயலாளர்.

5-146/1

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(பதுளை கிளை) - தேவனன்ஹலகே சனத் தர்மசேன

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் .-

"தேவனன்ஹலகே சனத் தர்மசேன கடப்பாடுடையவராக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், பதுளை பிரசித்த நொத்தாரிசு ஐ. எம். பீ. ஆனந்தவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, சனவரி 22 ஆந் திகதியிடப்பட்ட 9418 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலாலும் 2006, மே 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஐந்து இலட்சத்து அறுபத்திரண்டாயிரத்து எண்ணூற்று ஒன்பது ரூபா இருபத்திரண்டு சதம் (ரூபா 5,62,809.22) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்டதுமான 9418 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 5,62,809.22 பணத்தொகையை 2006, யூன் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் ஐ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

ஆர். ரண்கம என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, பெப்புருவரி 12 ஆந் திகதியிடப்பட்ட இல. 349 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டுள்ளார் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மெதவெவகே ரத்னா ஃபீலிக்ஸ் அன்ட்டன் மற்றும் திஸ்னா புஷ்பகுமாரி ஃபீலிக்ஸ் என்பவர்களில் கடன்பட்டவர் என்ற வகையில் கூறப்பட்ட தெனிபல்லே மெதவெவகே ரத்னா ஃபீலிக்ஸ் அன்ட்டன் என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 349 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் ஏழு இலட்சத்து நாற்பத்துமூவாயிரத்து நூற்று அறுபத்தைந்து ரூபா நாற்பத்துமூன்று சதம் (ரூ. 7,43,165.43) 2009, நவெம்பர் 05 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட ஏழு இலட்சத்து நாற்பத்துமூவாயிரத்து நூற்று அறுபத்தைந்து ரூபா நாற்பத்துமூன்று சதம் (ரூ. 7,43,165.43) 2009, நவெம்பர் 06 ஆந் திகதி முதல் இல. 349 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஆறு இலட்சத்து தொண்ணூற்று ஆறாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று ஏழு ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூ. 6,96,597.64) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபது வீதமும் (20%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 349 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், உடபலாத்த கோரளேயின் சென். மாக்ரட்ஸ் கிராமத்தில் அமைந்த ''சென் மாக்ரட்ஸ் எஸ்ட்டேட்'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எச். டீ. ஸ்மித் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1950, மாச்சு 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 245 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 7D எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட் 7E (லொட் இல. 51 என காட்டப்பட்டுள்ளது) ; கிழக்கிற்கு : லொட் 8 அரச காணி ; தெற்கிற்கு : லொட் 7C (லொட் இல. 23 என காட்டப்பட்டுள்ளது); மற்றும் மேற்கிற்கு : VC பாதை மற்றும் இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 2.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன். கூறப்பட்ட இல. 245 எனும் வரைபடத்திற்கு அமைவாக நுவரெலியா காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் O 132/22A இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட லொட் 7D மீள் அளவீடு செய்யப்பட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு விவரிக்கப்பட்டுள்ளது :-

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவிற்குள் உடபலாத்த கோரளேயின், உடபுஸ்ஸல்லாவை, சென். மாக்ரட்ஸ் கிராமத்தில் அமைந்த ''சென் மாக்ரட்ஸ் பசார்'' என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. விக்கிரமசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, செத்தெம்பர் 07 ஆந் திகதியிடப்பட்டு இல. 4847 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : பாதை ; கிழக்கிற்கு : வரிமதிப்பீட்டு இல. 25 ஐ ஏற்ற வளவு ; தெற்கிற்கு : பிரதான பாதைக்கு ஊடான ஒதுக்கம்; மற்றும் மேற்கிற்கு : வரிமதிப்பீட்டு இல. 23A ஐ ஏற்ற வளவு, மற்றும் இவ்எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 2.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதற்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன். கூறப்பட்ட இல. 4847 எனும் வரைபடத்திற்கு அமைவாக நுவரெலியா காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் O 132/262 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-150/3

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ.**

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(பிலியந்தலை கிளை) - கலபலன்னலாகே ஜயரத்ன மற்றும் வசந்த வீரசிங்க

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் .-

''கலபலன்னலாகே ஜயரத்ன மற்றும் வசந்த வீரசிங்க கடப்பாடுடையவர்களாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில், பிரசித்த நொத்தாரிசு என். சி. ஜயவர்தனாவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000, திசெம்பர் 06 ஆந் திகதியிடப்பட்ட 1375 ஆம் இலக்க முறி மற்றும் 2002, செத்தெம்பர் 27 ஆந் திகதியிடப்பட்ட 1662 ஆம் இலக்க முறி, மற்றும் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பி. டி. ரி. தர்மதிலகவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, ஏப்பிறல் 29 ஆந் திகதியிடப்பட்ட 1250 இலக்க முறி மற்றும் 2006, யூன் 21 ஆந் திகதியிடப்பட்ட 1552 ஆம் இலக்க முறி என்பன மீதான வருமதியான கொடுப்பனவில் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலாலும் 2009, பெப்புருவரி 08 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறிகள் மீது ஒன்பது இலட்சத்து முப்பத்திரண்டாயிரத்து அறுநூற்று எழுபத்து நான்கு ரூபா அறுபத்தாறு சதம் (ரூபா 9,32,674.66) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள்

சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டதும் சொல்லப்பட்டதுமான 1375, 1662, 1250 மற்றும் 1552 ஆகிய இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 9,32,674.66 பணத்தொகையை 2009, பெப்புருவரி 09 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும் விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் எஸ். மனம்பேரியினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிற்றி கோறளை, பள்ளே பற்றுவில் உள்ள கெஸ்பாவ பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட கெஸ்பாவ உப அலுவலக பிரிவின் தெமிலதுவவில் உள்ள வெல்லகஹாவத்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். டி. லியனசூரியவினால் தயாரிக்கப்பட்ட 17.11.1981 ஆந் திகதியிடப்பட்ட 2438 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்டுள்ள அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணியின் எல்லைகள் வடக்கு : எல். ஆர். சி. இனால் பொறுப்பேற்கப்பட்ட காணி; கிழக்கு : காணித்துண்டு 3 ; தெற்கு : காணித்துண்டு 2 ; மேற்கு : வீதி அத்துடன் சொல்லப்பட்ட 2438 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமை வானதும், கல்கிசை மாவட்ட காணிப்பதிவகத்தில் எம். 2139/153 ஆம் என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட இருபத்து ஒரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 21பே.) விஸ்தீரணம் கொண்ட ஆதனம்.

அத்துடன் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். டி. லியனசூரியவினால் தயாரிக்கப்பட்ட 17.11.1981 ஆந் திகதியிடப்பட்ட 2438 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள வீதி ஒதுக்கீட்டின் மீதான பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு. (சட்டம்) /சபைச் செயலாளர்.

5-146/31

---

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி, பின்வரும் தீர்மானமானது, இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''மல்சிறிபுரவில் ''சரத் பிரியந்த வெலந்தசல'' என்ற பெயர் மகுடத்தின் கீழும் குழுமத்தின் கீழும் தனியுரிமையாளராகத் தொழில் கொண்டுநடாத்துகின்ற மல்சிறிபுரவைச் சேர்ந்த களு ஆராச்சிகே மானிஸ் அப்புஹாமி என்பவர், இ. அ. நி. கூ. வங்கி சார்பில் குருநாகலையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. குணவர்தன என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1997, ஓகத்து 28 ஆந் திகதிய 1344 ஆம், மற்றும் 2003, செத்தெம்பர் 04 ஆந் திகதிய 2969 ஆம் இலக்கங்களைக்கொண்ட ஈட்டுமுறிகளின் மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், மேற்கூறப்பட்ட 1344 ஆம் மற்றும் 2969 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது 2009, நவெம்பர் 30 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒன்பது இலட்சத்து எட்டாயித்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா தொண்ணூற்று ஐந்து சதம் (ரூ. 9,08,395.95) கொண்ட தொகையும் 2009, திசெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை நான்கு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து நூற்று முப்பத்தாறு ரூபா எழுபத்தெட்டு சதம் (ரூ. 4,66,136.78) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்குப் பதினெட்டுச் சதவீத (18%) வட்டியும் சொல்லப்பட்ட களுஆராச்சிகே மானிஸ் அப்புஹாமி என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும். இ. அ. நி. கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க, இ. அ. நி. கூ. வங்கியினால் உறப்பட்ட காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஒன்பது இலட்சத்து எட்டாயித்து முந்நூற்று தொண்ணூற்று ஐந்து ரூபா தொண்ணூற்று ஐந்து சதம் (ரூ. 9,08,395.95) கொண்ட தொகையை 2009, திசெம்பர் 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை நான்கு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து நூற்று முப்பத்தாறு ரூபா எழுபத்தெட்டு சதம் (ரூ. 4,66,136.78) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்குப் பதினெட்டுச் சதவீத (18%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 1344 மற்றும் 2969 ஆம் இலக்கங்களைக்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

***1344 மற்றும் 2969 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்***

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்திலுள்ள இஹல ஒத்தொட்ட கோறளையின் ஹிரியால ஹத்பத்துவில் இப்பகமுவ மாகாணச் செயலகப் பிரிவினுள் 413- நபட்ட கிராம சேவைப் பிரிவில் நபட்டவில் அமைந்துள்ளதும். பன்சல்ஹின்ன எனவழைக்கப்படும் காணியினதாய் நிலஅளவையாளர் தலைமையதிபதியினால்

தயாரிக்கப்பட்ட 2803 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 318 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; சொல்லப்பட்ட காணித்துண்டம் 318 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : காணித்துண்டம் 319 ; கிழக்கில் : காணித்துண்டம் 320 ; தெற்கில் : காணித்துண்டம் 136 ; மற்றும் மேற்கில் : காணித்துண்டம் 317; பரப்பளவில் இது. அதன்மீதுள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் கட்டிடத்துடன் இரண்டு றூட் இருபத்துநான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 2றூ. 24பே.) கொண்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ. அ. நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

6-157/1

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(தும்புத்தேகம கிளை) - ஹேரத் முதியான்சேலாகே சுனில் ஆனந்த பியசேன

ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையினால், 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 01 ஆந் திகதியன்று நடத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"ஹேரத் முதியான்சேலாகே சுனில் ஆனந்த பியசேன கடப்பாடு உடையவராக, ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சார்பில் சிலாபம் பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹேவபத்திரணவினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, ஒற்றோபர் 16 ஆந் திகதியிடப்பட்ட 1710 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2009 ஒற்றோபர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது பதினெட்டு இலட்சத்து எழுபத்து நான்காயிரத்து தொளாயிரத்து எழுபத்தைந்து ரூபா ஆறு சதம் (ரூ. 18,74,975.06) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்டதுமான 1710 ஆம் இலக்க முறி, மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 18,74,975.06 பணத்தொகையை 2009, நவெம்பர் 01 ஆந் திகதியில் இருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு உரிமம் பெற்ற ஏல விற்பனையாளர் பீ. முத்துக்குமாரனவினால், பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

வடமத்திய மாகாணம், அநுராதபுரம் மாவட்டம், நுவரகம் கோறளைவின் (நொச்சாதுவ பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட ISPP 2) குடாரத்மலேரயில் உள்ள "குடா ரத்மலே முக்கலந்த" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம். உரிமம் பெற்ற நிலஅளவையாளர் கே. கே. சின்னையா வினால் தயாரிக்கப்பட்ட 2006, ஓகத்து 15 ஆந் திகதியிடப்பட்ட 206ஏ ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள, காணித்துண்டு கள் 1, 2 மற்றும் 3 என அடையாளம் இடப்பட்ட பொது எல்லையைக் கொண்டுள்ள பகிரப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : ரி. ஏ. எஸ். சிரிமாவதியின் காணி (தற்போது வசிப்பவர் ஈ. ஜெயினுள் ஆப்டீன்) ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தின் காணித்துண்டு 4 ; தெற்கு : பிரதேச சபை வீதி; மேற்கு : ஒதுக்கீட்டு. அத்துடன் அநுராாதபுரம் காணிப் பதிவகத்தில் ஏ 401/215 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட முப்பத்து ஒன்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 39பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி.பொ.மு (சட்டம்)/சபைச் செயலாளர்.

1-146/32

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. 1030 5315 2051 - டபிள்யூ. எம். எல். பி. பெர்ணாண்டோ மற்றும் ஆர். ஆர். ஏ. பீ. ஆர். ஸ்ட்டெல்லா

2010, மாச்சு 25 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக குருநாகல் பிரசித்த நொத்தாரிசு ஏ. ஜே. பண்டார என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, செத்தெம்பர் 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 887 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர் என்ற வகையில் கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்ணகுலசூரிய மொரிஸ் லக்ஷ்மன் பெனட் பெர்ணாண்டோ மற்றும் ரணவீர ரத்து ஆரச்சிகே பத்மா ரஞ்சனி ஸ்ட்டெல்லா என்பவர்களில்

கடன்பட்டவர்கள் என்ற வகையில் கூறப்பட்ட வர்ணகுலசூரிய மொரிஸ் லக்ஷ்மன் பெனட் பெர்ணாண்டோ என்பவர் மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட இல. 887 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் ஏழு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நூற்று ஐம்பத்தொன்பது ரூபா இருபது சதம் (ரூ. 7,98,159.20) 2010, சனவரி 06 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட் ஏழு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து நூற்று ஐம்பத்தொன்பது ரூபா இருபது சதம் (ரூ. 7,98,159.20) 2010, சனவரி 07 ஆந் திகதி முதல் இல. 887 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஏழு இலட்சத்து இருபத்தையாயிரத்து எண்ணூற்று ஐம்பது ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 7,25,850.89) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்நான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட் ஈட்டு முறி இல. 887 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாரவில பதிவுப் பிரிவிற்குள் பிட்டிகல் கோரளேயின் மெதபலாத்த துன்கன்னாவ , தபோவ, மற்றும் சந்தானம்கம கிராமத்தில் அமைந்த ''சித்தவான தோட்டம்'' என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். பி. நவரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997, ஏப்பிறல் 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 3530 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 152 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட்கள் 125 மற்றும் 153 ; கிழக்கிற்கு: தம்போர் எஸ்டேட்; தெற்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ரஞ்சித் யாப்பா என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 4862 எனும் வரைபடத்தில் லொட் 2, மற்றும் ; மேற்கிற்கு : லொட் 151 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் இருபத்து நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 24பே.) அல்லது 0.0607 ஹெக்டேயர்கள் அளவினைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள் ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் மாரவில காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் J 71/284 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட இல. 3530 எனும் வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட லொட்கள் 125, 94, 53, 43 மற்றும் 13 மீதும் அதன் ஊடாக பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடன் கூடியது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-150/1

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்னர் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கணக்கு இல. 0056 5000 5211 - எம். பி. எம். என். ஆரியவன்ச மற்றும் ஆர். எம். எல். டபிள்யூ. என். பி. எம். ரத்நாயக்க

2009, சனவரி 29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதாவது :-

''இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் நிகில்லகஸ்கட, எக்ரிய மஹாதென்னயைச் சேர்ந்த மிகல் பெரேரா மகாவிதானகே நிமால் ஆரியவன்ச மற்றும் ரத்நாயக்க வாசல முதியான்சேலாகே லபுதல வளவ்வே நில்மினி பிரியங்கனி மல்லிகா ரத்நாயக்க ஆகிய கடப்பாடுடையவர்களும் சொல்லப்பட்ட ஈடு செய்தவரான நிகிலகஸ்கட, எக்ரிய மஹாதென்னயைச் சேர்ந்த வாசல முதியான்சேலாகே லபுதல வளவ்வே நில்மினி பிரியங்கனி மல்லிகா ரத்நாயக்கவும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்ட ஆதனங்கள் மற்றும் வளவுகளைப் பிணையாக வைத்து பீகியூ 144 கம்பனி இலக்கம் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ யின் சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். ஜீ. டி. சுனாரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2005, யூலை 07 ஆந் திகதியிடப்பட்ட 557 ஆம் இலக்க பிணை முறி மீது வழங்கப்பட்ட கடன் தொகையை திருப்பிச் செலுத்துவதில் தவணை தவறியதால், 2008, திசெம்பர் 22 ஆந் திகதியன்று உள்ளவாறு மேற்சொல்லப்பட்ட சம்பத் வங்கிக்கு தற்போது வரவேண்டியதும் உரியதுமான இலங்கையில் சட்டரீதியான பாவனையிலுள்ள பணத்தில் மூன்று இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து இருபத்துநான்கு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 3,89,024.57) சொல்லப்பட்ட 557 ஆம் பிணை முறி மீது திருப்பிச் செலுத்தப்பட வேண்டியிருப்பதால், 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ யின் பணிப்பாளர்கள் சபையானது, பிணை முறி இலக்கம் 507 மூலம் சொல்லப்பட்ட கடனுக்காக சம்பத் வங்கியிடம் அடகு வைக்கப்பட்டதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டதுமான ஆதனங்கள் மற்றும் வளவுகளை மூன்று இலட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து இருபத்துநான்கு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 3,89,024.57) அறவிடுவதற்காகவும் அத்துடன், 2008, திசெம்பர் 23 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை அறுபத்திரண்டாயிரம் ரூபா (ரூ. 62,000) மீது வருடாந்தம் பதினாறு சதவீதம் (16%) வட்டியும் மேலும் இரண்டு இலட்சம் (ரூ. 2,00,000) மீது வருடாந்தம் பதினேழு சதவீதம் (17%) வட்டித்தொகையுடன் விளம்பரங்கள் மற்றும் வேறு கட்டணங்கள் ஆகியவற்றை சேர்த்தும் பெறப்பட்ட எவையேனும் இருப்பின் அதனைக் கழித்தும் அறவிடுவதற்காகவும் கண்டியிலுள்ள உரிமம் பெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பதற்கு முடிவு செய்துள்ளது.''

**அட்டவணை**

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், உடஹேவஹேத கண்ணேவ கோரளேயில் ஹங்குராங்கெத்த பிரதேச சபை எல்லைக்குட்பட்ட எக்கிரியாவயில் அமைந்திருக்கும் ''மஹாதென்ன''

என அழைக்கப்படுவதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ஆர். பி. விஜேகோன் அவர்களால் தயாரிக்கப்பட்டு 2000, மே 13 ஆந் திகதியிடப்பட்ட 1093 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ளதும், பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டதுமான காணித்துண்டும். அதனுடன் சேர்ந்த மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள் மற்றும் அதன் மீது நிலைத்திருக்கும் சகலவற்றுடன் இந்தக் காணிக்குரிய உரிமைகள், வழிவசதிகள் சலுகைகள், சௌகரியங்கள், சேவக உரிமை மற்றும் சேர்மானங்கள் என்பவற்றுடன் மேற்சொல்லப்பட்ட காணித்துண்டு 2 இன் எல்லைகளாக - வடக்கில் : பிரதான வீதி; கிழக்கில் : ரணதுங்க அவர்களால் கோரப்படும் காணியை வேறாக்கும் வேலி; தெற்கில் : ரஜமுனியால் கோரப்படும் காணியை வேறாக்கும் நடைபாதை; மேற்கில் : வரைபடம் இலக்கம் 1093 இன்படி காணித்துண்டு 1 என்பவற்றுடன் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணம் வரைபடம் இல. 1093 இன்படி முப்பத்தியொன்பது தசம் மூன்று ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 39.36பே.) இக்காணி நுவரெலியா காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் R 305/ 203 இல் பதியப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-150/ 2

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 1079 5327 5612 - பீ. எஸ். டபிள்யூ. டி சில்வா

2009, ஓகத்து 27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

“PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ கே. டீ. பிரசங்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, ஓகத்து 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 205 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர்கள் என்ற வகையில் கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பெத்தஹெந்தி சுதத் வீரலால் டி சில்வா என்பவர், மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையின் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் பதின்நான்கு இலட்சத்து இருபத்தோராயிரத்து ஐநூற்று இருபத்திரண்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 14,21,522.90) 2009, யூன் 22 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்ப துடன், குறிப்பிடப்பட்ட பதின்நான்கு இலட்சத்து இருபத்தோராயிரத்து ஐநூற்று இருபத்திரண்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 14,21,522.90) 2009, யூன் 23 ஆந் திகதி முதல் இல. 205 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை பதின்மூன்று இலட்சத்து இருபத்தோராயிரத்து அறுநூற்று தொண்ணூற்று மூன்று ரூபா தொண்ணூற்று ஐந்து சதம் (ரூ. 13,21,693.95) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு தசம் ஐந்து வீதம் (17.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டுமுறி இல. 205 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.”

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறை தொட்டமுனே தெற்கின், அலுத்கம் பெத்தவின், களுவாமோதரவில் அமைந்த ‘‘மேரிவத்த’’ என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. டபிள்யூ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2003, பெப்புருவரி 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 2300 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : அதே காணியின் லொட் 1 ; கிழக்கிற்கு : எலபொடவத்த எனும் தொம்பகஹாவத்த ; தெற்கிற்கு : வீதி மற்றும் மேற்கிற்கு : திம்புல்காஹாவத்த எனும் பங்களாவத்த இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 30.0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிரக்ள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகடளுடன் கூறப்பட்ட இல. 2300 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 2A கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:-

மேற்கூறப்பட்ட களுவாமோதரவில் அமைந்த ‘‘மேரிவத்த’’ என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். டீ. எஸ். வீரக்கொடி என்பவரால் தயாரிக்கப்பட்ட 1987, மார்ச் 13 ஆந் திகதியிடப்பட்ட இல. 2120 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 2 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட் 1 ; கிழக்கிற்கு : எலபொடவத்த எனும் தொம்பகஹாவத்த ; தெற்கிற்கு : வீதி மற்றும் மேற்கிற்கு : திம்புல்காஹாவத்த எனும் பங்களாவத்த இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது தசம் மூன்று ஏழு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 30.375பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதனங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகடளுடன் கூறப்பட்ட இல. 2102 எனும் வரைபடத்திற்கு அமைவாக களுத்துறை

காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் H307/06 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-150/4

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிக்கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 0076 5000 0182 - எம். சீ. கே. மெனிக்கமகே

2008, ஏப்பிறல் 30ஆந் திகதி அன்று நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் விசேடமாகவும், ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

''கடப்பாடுடையவரான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு, கந்தானை, நீர்கொழும்பு ரோட், இல. 433/D இல் மஹேஷ் சமிந்த குமார மெனிக்கமகே வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஆர். ஏ. டி. சுனாரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2006, ஏப்பிறல் 05 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1036 இன் மீது வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும் 2007, செத்தெம்பர் 18 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்கூறப்பட்ட முறிமூலம் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கிக்கு இலங்கையில் சட்டரீதியாகப் பாவனையிலுள்ள எட்டு இலட்சத்து இருபத்தாறாயிரத்து நாறூற்று பதினேழு ரூபா அறுபத்துமூன்று சதம் (ரூ. 8,26,417.63) கொண்ட தொகை தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி பணிப்பாளர்கள் சபையானது சொல்லப்பட்ட இலங்கையில் பாவனையிலுள்ள நாணயத்திலான முழுத் தொகை எட்டு இலட்சத்து இருபத்தாறாயிரத்து நாறூற்று பதினேழு ரூபா அறுபத்துமூன்று சதம் (ரூ. 8,26,417.63) ஐ 2007, செத்தெம்பர் 19 ஆந் திகதியிலிருந்து விற்பனை திகதி வரை ஏழு இலட்சத்து இருபத்தையாயிரத்து இருநூற்று தொண்ணூறு ரூபா ஆறு சதம் (ரூ. 7,25,290.06) கொண்ட தொகை மீது ஆண்டுக்கு பதினாறு (16%) சதவீத வட்டியுடன் உறப்பட்ட விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு கட்டணங்கள் (எவையேனும் கட்டணங்கள் பெறப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து) ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக இல. 1036 ஐக் கொண்ட ஈட்டு முறி மூலம் வரையறுக்கப் பட்ட சம்பத் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதும் இத்துடனுள்ள அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள துமான ஆதனங்கள் மற்றும் வளவுகள் கண்டியைச் சேர்ந்த உத்தரவு பெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களால் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடபலாத கோரளையின் தும்பனையில் தும்பன பிரதேச சபை எல்லையினுள் கலகெதர இல் அமைந்த ''தென்னவத்த'' என அழைக்கப்படும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. பி. அத்தநாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 1992, யூன் 10 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 2855 இல் குறிப்பிடப்பட்டு பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட துண்டு 3 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்த மண், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுடன், மேலும் மேற்கூறப்பட்ட காணிக்குரிய வழி வசதிகள், உரிமைகள், மற்றும் சலுகைகள் சகலதுடன், மேற்கூறப்பட்ட துண்டு 3 இன் எல்லைகளாவன - வடக்கில் : துண்டு 1; கிழக்கில் : 4 (ரோட்) ; தெற்கில் : பொஹொல்லயத்த இருந்து கலகெதர வரையான பிரதான வீதி ; மற்றும் மேற்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. கே. எம். வெலிவிட்ட அவர்களால் தயாரிக்கப்பட்டு 1984, பெப்புருவரி 26 ஆந் திகதியிடப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 217 இல் துண்டு 2 என்பவையாகும். மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 2855 இற்கமைய இந்தக் காணி முப்பத்தெட்டு தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 38.75பே.) விஸ்தீரணமுடையது. இந்தக் காணி கண்டி காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் K 283/266 ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் மேற்கூறப்பட்ட நிலஅளவை வரைபடம் இல. 2855 இல் துண்டு 4 ஊடாகவும் மேலாகவும் வழி உரிமையுடன்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-150/5

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 0084 5000 0184 - எஸ். யு. மனோஹரன்

2009, ஓகத்து 27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

''PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசான என். எஸ். கலங்சூரிய என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, சனவரி 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 555 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டுள்ளவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் செல்லப்பிள்ளை உடையார் மனோஹரன் என்பவர், மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட 555 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையின் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் ஒன்பது இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து நூற்று எழுபத்தாறு ரூபா அறுபத்தைந்து சதம் (ரூ. 9,44,176.65) 2009, ஓகத்து 17 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன்,

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசுவான என். எஸ். கலங்சூரிய என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, சனவரி 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 557 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டுள்ளவர்கள் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் செல்லப்பிள்ளை உடையார் மனோஹரன் என்பவர், மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட 557 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையின் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் மூன்று இலட்சத்து எழுபத்தேழாயிரத்து எண்ணூற்று இருபத்துமூன்று ரூபா ஐம்பத்தாறு சதம் (ரூ. 3,77,823.56) 2009, ஒகத்து 17 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன்,

மற்றும் கூறப்பட்ட இல. 555 மற்றும் இல. 557 எனும் ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையான இலங்கையின் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் பதின்மூன்று இலட்சத்து இருபத்து இரண்டாயிரம் ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 13,22,000.21) 2009, ஒகத்து 17 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் குறிப்பிடப்பட்ட பதின்மூன்று இலட்சத்து இருபத்து இரண்டாயிரம் ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 13,22,000.21) 2009, ஒகத்து 18 ஆந் திகதி முதல் இலக்கங்கள் 555 மற்றும் 557 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வெண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் தகிதி வரை எட்டு இலட்சத்து பதினாறாயிரத்து இருநூற்று எழுபத்திரண்டு ரூபா நான்கு சதம் (ரூ. 8,16,272.04) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து வீதம் (15%) மற்றும் மேலும் ஒரு கட்டணமாக மூன்று இலட்சம் ரூபா (ரூ. 3,00,000) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிக்கு இருபது வீதம் (20%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட இலக்கங்கள் 555 மற்றும் 557 இன் மீது பிணயையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, பல்லேபத்துவின் கடுவெல பிரதேச சபை எல்லைகளுக்குள் ஒருவெல கிராமத்தில் அமைந்த "வனபொத்துமூக்கலான, ஒருவல எஸ்டேட், தெனகாஹாதெனிய, நாகாஹாதெனிய, மாஹாகெலேமூக்கலான, ரஜஹேன, கந்தன்தெனிய" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பீ. ஆர். பத்திராஜ என்பவரால் தயாரிக்கப்பட்ட 1999, யூன் 22 ஆந் திகதியிடப்பட்ட இல. 2535 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 650 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட் 649 ; கிழக்கிற்கு : லொட் 542; தெற்கிற்கு : லொட் 653 மற்றும் ; மேற்கிற்கு : லொட் 698 மற்றும் லொட் 639 இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் ஆறு தசம் ஒரு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 6.1பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் மற்றும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வீதி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 2535 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகமை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 1699/91 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

காணியின் ஊடாகவும் அதன் மீதுமான மார்க்க உரிமையுடனானது :-

கூறப்பட்ட இல. 2535 எனும் வரைபடத்தில் லொட்கள் 542, 591 மற்றும் 487 கூறப்பட்ட இல. 2535 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட வடிகால்களையும் வீதிகளையும் உபயோகிக்கக்கூடிய உரிமைகளுடனானது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-150/6

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 1024 5007 5458 - எச். எல். ஆர். பீரிஸ் மற்றும் டபிள்யூ. சி. எஸ். ஈ. பெர்னான்டோ

சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் 2009, மே 14 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பின்வருமாறு -

"கம்பனி PQ 144 ஐக் கொண்டுள்ள சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எப். பெர்ணாண்டோபுள்ளே என்பவரால் உறுதிப்படுத்தப்பட்ட 2005, திசெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட முறி இல. 7487 மூலம் அடமானம் செய்யப்பட்ட இங்கு அட்டவணையில் பூரணமாக விவரிக்கப்பட்டுள்ள சொத்து மற்றும் வளவின் பிணைக்கு எதிராக வழங்கப்பட்ட கடன் வசதியைக் கடன்பட்டோர் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிலுள்ள நீர்கொழும்பு, திம்பிரிகஸ்கட்டுவ, கதிரான தெற்கு, குல்வத்த, இல. 101/38 ஐச் சேர்ந்த ஹப்புவத்தகே லுசன்த ரோமன் பீரிஸ் மீளச் செலுத்தத் தவறியுள்ளார்.

அத்துடன் மேற்கூறப்பட்ட முறி இல. 7487 இன் மீது கடன் நிலுவை மொத்தத் தொகையாகிய இலங்கையின் சட்டரீதியான பணம் ரூபா நான்கு இலட்சத்து எண்பத்தாறாயிரத்து எழுபது ரூபா எண்பத்தேழு சதம் (ரூ. 4,86,070.87) 2009, பெப்புருவரி 11 ஆந் திகதியன்று மேற்கூறப்பட்ட சம்பத் வங்கி பிஎல்சீக்குச் செலுத்தித் தீர்க்க வேண்டிய நிலுவையாக உள்ளது.

அத்துடன் கடன்பட்டோர் என்ற வகையில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிலுள்ள நீர்கொழும்பு, திம்பிரிகஸ்கட்டுவ, கதிரான தெற்கு, குவ்வவத்த, இல. 101/ 38 ஐச் சேர்ந்த மேற்கூறப்பட்ட ஹல்பவத்தகே லுசாந்த ரோமன் பீரிஸ் மற்றும் வத்தலகே கிரிஷான்தினி சிவன்தி எனாமலி பெர்னாண்டோ ஆகிய இருவரும் அத்துடன் ஈடுவைத்தவர் என்ற வகையில் மேற்கூறப்பட்ட ஹல்பவத்தகே லுசாந்த ரோமன் பீரிஸ் கம்பனி இல. பிகியூ 144 ஐக் கொண்டுள்ள சம்பத் வங்கி பிஎல்சியின் சார்பாக நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எப். பெர்ணாண்டோபுள்ளேவினால் உறுதிப்படுத்தப்பட்ட 2007, ஏப்பிறல் 27 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 9585 இன் மூலம் ஈடுவைக்கப்பட்டு அடமானம் செய்யப்பட்ட இங்கு அட்டவணையில் பூரணமாக விவரிக்கப்பட்டுள்ள சொத்து மற்றும் வளவின் பிணைக்கு எதிராக வழங்கப்பட்ட கடன் வசதியை மீளச் செலுத்தத் தவறியுள்ளார்.

அத்துடன் தற்பொழுது மேற்கூறப்பட்ட முறி இல. 9585 இன் பேரில் செலுத்தித் தீர்க்க வேண்டியுள்ள மொத்தக் கடன் தொகையாகிய ரூபா பத்து இலட்சத்து ஒன்பதாயிரத்து இருநூற்று இருபத்திரண்டு ரூபா தொண்ணூறு சதம் (ரூ. 10,09,222.90) 2009, பெப்புருவரி 11 ஆந் திகதியன்று மேற்கூறப்பட்ட சம்பத் வங்கி பிஎல்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவையாகவுள்ளது.

அத்துடன் 2009, பெப்புருவரி 11 ஆந் திகதியன்று மேற்கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீக்கு மேற்கூறப்பட்ட முறி இலக்கங்கள் 7487 மற்றும் 9585 இன் பேரில் மொத்தமாகச் செலுத்த வேண்டி யுள்ள நிலுவை ரூபா பதின்நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து இருநூற்று தொண்ணூற்று மூன்று ரூபா எழுபத்தேழு சதம் (ரூ. 14,95,293.77) இலங்கையில் சட்டபூர்வமான பணத்தொகை செலுத்தித் தீர்க்க வேண்டியுள்ளது. அத்துடன் மேற்கூறப்பட்ட தொகை பதின்நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து இருநூற்று தொண்ணூற்று மூன்று ரூபா எழுபத்தேழு சதம் (ரூ. 14,95,293.77) இலங்கையின் சட்டபூர்வமான பணத்தொகை செலுத்தித் தீர்க்க வேண்டியுள்ளது. அத்துடன் மேற்கூறப்பட்ட தொகை பதின்நான்கு இலட்சத்து தொண்ணூற்று ஐயாயிரத்து இருநூற்று தொண்ணூற்று மூன்று ரூபா எழுபத்தேழு சதம் (ரூ. 14,95,293.77) அத்துடன் வருடத்திற்கு பதினாறு வீதத்தில் (16%) நான்கு இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து நாநூற்று ஐம்பத்தொரு ரூபா தொண்ணூற்று ஒரு சதம் (ரூ. 4,72,451.91) மேலதிக வட்டியுடன் அத்துடன் மேற்கூறப்பட்ட முறி இலக்கங்கள் 7487 மற்றும் 9585 இன் மீது 2009, பெப்புருவரி 12 முதல் மொத்தக் கடன் தொகை செலுத்தித் தீர்க்க வேண்டிய திகதி வரை வருடத்திற்கு இருபது தசம் ஐந்து வீதத்தில் (20.5%) எட்டு இலட்சத்து அறுபத்தேழாயிரத்து நூற்று எண்பத்தொன்பது ரூபா ஐம்பத்தொன்பது சதம் (ரூ. 8,67,189.59) தொகை மீது மேலதிக வட்டியையும் பெற்றுக் கொள்ளப்பட்ட (ஏதேனும்) கொடுப்பனவுகள், கழித்து மிகுதியையும் விளம்பரச் செலவுகள், மற்றும் செலவிடப்பட்ட ஏனைய கட்டணங்களையும், அறவிடுவதற்காக கண்டியைச் சேர்ந்த அனுமதிபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலம் பகிரங்க ஏலத்தில் மேற்கூறப்பட்ட முறி இலக்கங்கள் 7487 மற்றும் 9585 மூலம் கடன் வசதிகளுக்குப் பிணையாக மேற்கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட இங்கு அட்டவணையில் பூரணமாக விபரிக்கப்பட்டுள்ள சொத்து மற்றும் வளவுகளை விற்பனை செய்வதென 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் 04 ஆம் இலக்க சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) மூலம் மாற்றப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழுள்ள மேற்கூறப்பட்ட சம்பத் வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்திலுள்ள நீர்கொழும்பு பதிவுப் பிரிவிற்குட்பட்ட அளுத்குறு கோரளையின் துனகஹ பத்துவிலுள்ள கதிரான வடக்கில் அமைந்துள்ள உலுஅப்பலம்கட்டுவவின் துண்டு 1 என அழைக்கப்படுகின்ற சகல காணிகளும் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். மெண்டிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1998, மாச்சு 14 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1335 இற்கமைய மேற்கூறப்பட்ட காணித்துண்டு 1 வடக்கே : துண்டு 3 ஐயும் (14 அடி மற்றும் 8 அங்குல அகலமுடைய காணியைச் சென்றடைகின்ற வசதிகளுடன்) ; கிழக்கே : துண்டு 2 ஐயும் ; தெற்கே : நிலவரைபட இல. 114பி இலுள்ள துண்டு 37 ஐயும் ; மேற்கே : நிலவரைபட இல. 114 பி (30 அடி அகலமுடைய வீதி ஒதுக்கம்) ; கிழக்கே : துண்டு 58 ஐயும் எல்லையாகக் கொண்டுள்ளதுடன் அங்கு காணப்படுகின்ற சகல உரிமைகள், வழிகள், சலுகைகள், அனுபோகபாக்கியத்தை, கட்டாய சேவகம், மற்றும் தேவையான பொருட்களுடன் அத்துடன் கட்டடங்கள், பெருந்தோட்டங்கள், அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் பதினேழு தசம் ஏழு மூன்று பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 17.73பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுடன் நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் ஈ 968/125 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட நிலவரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீதி வழிகள் மீது வழிக்கான உரிமையுடன்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-150/7

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 0020 5000 2740 - சீ. யூ. ரணசிங்ஹ

2010, சனவரி 28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசான டபிள்யூ. சீ. கே. விஜேதுங்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, செத்தெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட இல. 3107 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர் என்ற வகையில் கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சித்ரா உப்புல் ரணசிங்ஹ என்பவர், மீள் செலுத்தத்

தவறியுள்ளமையினால், கூறப்பட்ட ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையில் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் நான்கு இலட்சத்து எண்பத்தோராயிரத்து எழுநூற்று அறுபத்திரண்டு ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 4,81,762.49) 2009, நவெம்பர் 24 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட நான்கு இலட்சத்து எண்பத்தோரா யிரத்து எழுநூற்று அறுபத்திரண்டு ரூபா நாற்பத்தொன்பது சதம் (ரூ. 4,81,762.49) 2009, நவெம்பர் 25 ஆந் திகதி முதல் இல. 3107 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நான்கு இலட்சத்து இருபத்தையாயிரத்து அறுநூற்று நாற்பத்து நான்கு ரூபா எட்டு சதம் (ரூ. 4,25,644.08) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதின்நான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 3107 இன் மீது பிணையாக வைக்கப்பட் டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

சபரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், குருவிட்ட கோரளேயின் பல்லே பத்துவின் ஏஹேலியகொட பிரதேச சபை எல்லைக்குள் தொரனகந்த கிராமத்தில் அமைந்த "மின்னஹேனயில் ஒரு பகுதி" என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. பி. இலங்கசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, ஓகத்து 19 ஆந் திகதியிடப்பட்ட இல. R 162/05 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவயையாளர் கே. பாலிபன விஜேரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 499 எனும் வரைபடத்தில் லொட் 4 மற்றும் 05; கிழக்கிற்கு : பிரதான வீதி மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ரத்னம் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 4012 எனும் வரைபடத்தில் லொட் 6B; தெற்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ரத்னம் என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 4012 எனும் வரைபடத்தில் லொட் 6B ; மற்றும் மேற்கிற்கு :உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. பாலிபன விஜேரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 499 எனும் வரைபடத்தில் லொட் 4 மற்றும் 05 முதலிஹாமி மற்றும் ஏனையோரின் புவாதெனியஹேன, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி. விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இருபத்தி ஆறு தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 26.75பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. R 162/05 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிசாவளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் V / 170/143 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. . R 162/05 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் "A" உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ரத்னம் என்பவரால் தயாரிக்கப் பட்ட 1994, பெப்புருவரி 15 ஆந் திகதியிடப்பட்ட இல. 4012 எனும் வரைபடத்தில் லொட் 6A மீள் அளவீடு செய்யப்பட்டுள்ளதுடன், கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட இல. 449 எனும் வரைபடத்தில் லொட் 6 அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டாகும்:-

தொரனகந்த கிராமத்தில் அமைந்த "மின்னஹேன" என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. பாலிபன விஜேரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1970, சனவரி 31 ஆந் திகதியிடப்பட்ட இல. 449 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 6 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடகிழக்கிற்கு : அவிசாவளை முதல் இரத்தினபுரி வரையான பிரதான வீதி; தென்மேற்கிற்கு : முதலிஹாமி மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் பூவாதெனியஹேன மற்றும் ; வடமேற்கிற்கு : லொட்கள் 4 மற்றும் 5 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் மூன்று றூட்கள் மற்றும் பதின்மூன்று தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 3றூ. 13.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 449 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிசாவளை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் V / 81/83 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-150/8

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 0007 5009 9416 - பீ. ஏ. அநுர

2009, ஓகத்து 27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி லிமிட்டெட் பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கண்டி பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். என். ஏ. ரத்நாயக்க என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, திசெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 112 மற்றும் 2006, திசெம்பர் 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 265 எனும் ஈட்டு முறிகளின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடன்பட்டவர்கள் என்ற வகையில் கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பன்டித்தசேக்கர ஆரச்சிலாகே அநுர என்பவர், மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், கூறப்பட்ட ஈட்டு முறிகளின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையின் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் மூன்று இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து இருபத்துமூன்று ரூபா தொண்ணூற்று எட்டு சதம் (ரூ. 3,84,023.98) 2009, ஏப்பிறல் 24 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட மூன்று இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து

இருபத்துமூன்று ரூபா தொண்ணூற்று எட்டு சதம் (ரூ. 3,84,023.98) 2009, ஏப்பிறல் 25 ஆந் திகதி முதல் இல. 112 மற்றும் இல. 265 எனும் ஈட்டு முறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை மூன்று இலட்சத்து முப்பதாயிரத்து எண்ணூற்று அறுபத்தெட்டு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூ. 3,30,868.57) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு இருபத்திமூன்று வீதம் (23%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட இல. 112 மற்றும் இல. 265 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணயைாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது.''

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், மெத தும்பரவின் பாலஸ் பத்துவ கிழக்கு கோரளேயின் கரலியத்த மெத்கம்மெத்த கிராமத்தில் அமைந்த எக்கனேகெதரவத்த மற்றும் கொஸ்கொள்ளவத்த என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் என். டி. பீ. வேத்தேவ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, ஒற்றோபர் 09 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் பீ. மாப்பலாகம என்பவரால் தயாரிக்கப்பட்ட 1992, மாச்சு 05 ஆந் திகதி மற்றும் பெப்புருவரி 05 ஆந்திகதியிடப்பட்ட லொட் 26 இன் சுருக்கமான இல. 1242 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு லொட் 26 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : லொட் 29 எனக் குறிப்பிடப்பட்ட வீதிக்கான ஒதுக்கம் (10 அடி அகலம்) ; தென்கிழக்கிற்கு : லொட் 25; தென்மேற்கிற்கு : லொட் 18 மற்றும் ; வடமேற்கிற்கு : லொட் 29 இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணி விஸ்தீரணம் பத்தொன்பது தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 19.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 1242 எனும் வரைபடத்திற்கு அமைவாக கண்டி காணிப்பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் S 92/330 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-150/9

---

**மக்கள் வங்கி-காலி கோட்டை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம்*

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், ஹேவாகம் கோறளையில், மெதபத்துவவில், ஹோமாகம பிரதேச சபை எல்லையில், 7 ஆம் இலக்க பாதையில் ஜல்த்தரையில் அமைந்துள்ள ஐரின் எஸ்டேட் எனப்படும் ஐரின் லேன்ட் எஸ்டேட் தற்போது அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டம் என்று அழைக்கப்படும் காணிக்கு 2004.05.27 ஆந் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். அபேரத்ன என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 540 ஆம் இலக்க கூட்டாதன காணிவரைபடத்தின் 2 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வீட்டு இலக்கம் A C11/G/1 எனவும் கூட்டாதன இலக்கம் 1C11/F0/CP1 எனவும் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மாடிகளைக் கொண்ட C11 என்ற இலக்க கட்டிடத்தின் கீழ் மாடியில் அமைந்துள்ள C11/G/1 என்ற இடம் குடியமர்த்துவதற்காக வேறாக்கப்பட்டுள்ளது. இத்துடன் 1CE1, 1CE4, 1CE5, 1CE6 ஆகிய பொது இடங்களையும் அந்த வரைபடத்தில் 2 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான C11/G/1 என்ற அலகின் எல்லைகளாக - வடக்கே : 1CE1 என்ற பொதுவான அலகினால் இந்த பிரிவு வேறாக்கப்படும் சுவரின் மத்தியும்; கிழக்கே : 1CE1 என்ற பொதுவான அலகினால் இந்த பிரிவு வேறாக்கப்படும் சுவரின் மத்தியும் ; தெற்கே : 1CE1 மற்றும் 1CE4 ஆகிய அலகுகளினால் இந்த பிரிவு வேறாக்கப்படும் சுவரின் மத்தியும் ; மேற்கே : 1CE4 என்ற அலகினால் இந்த பிரிவு வேறாக்கப்படும் சுவரின் மத்தியும் மற்றும் கூட்டாதான வரைபடத்தின்படி 1C11/F0/CP2 என்ற அலகும் ; மேலாக : மேல் மாடி, இந்த அலகை வேறாக்கும் கூட்டாதன இலக்கம் 1C11/F1/CP1 என்ற அலகும் ; கீழாக : நிலத்தினால் இந்த அலகு வேறாக்கப்படும் பகுதியும் அமைந்து காணப்படுகின்றன. இதன்படி (45 ச. மீ.) நாற்பத்து ஐந்து சதுர மீட்டர் விஸ்தீரணம் கொண்ட கூட்டாதனம் மற்றும் அதற்கு சொந்தமான பொதுவசதிகள் யாவும் அவிசாவளை காணிப் பதிவு அலுவலகத்தில் Con N/02/103 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

5-160

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : 0102900086

கடனாளியின் முழுப்பெயர் : ஏக்கநாயக்க முதியன்சேலாகே ஜயலால் ஏக்கநாயக்க

"கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. என். பெரேரா என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 1459 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2008.01.01 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் கீழ் எட்டு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நாநூற்று இருபது ரூபா ஆறு சதம் (ரூபா 8,88,420.06) 2009.06.30 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால்,

1. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான எட்டு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து

அறுநூற்று எண்பத்திரண்டு ரூபா இருபத்தைந்து சதத்தினையும் (ரூபா 8,64,682.25) அதற்கான 2009.06.30 ஆந் திகதி வரையிலான வட்டியாக இருபத்துமூவாயிரத்து எழுநூற்று முப்பத்தேழு ரூபா எண்பத்தொரு சதத்தினையும் (ரூபா 23,737.81) இதன்படி மொத்தமாக எட்டு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நாநூற்று இருபது ரூபா ஆறு சதத்தினை (ரூபா 8,88,420.06) அறவீடு செய்யவும்;

2. குறிப்பிட்ட எட்டு இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து அறுநூற்று எண்பத்திரண்டு ரூபா இருபத்தைந்து சதத்திற்கான (ரூபா 8,64,682.25) அறவீடு செய்ய வேண்டிய 3.00% மான வருடாந்த வட்டியினை 2009.07.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்;

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை.

அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு) மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். விக்ரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது''.

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், ஹோமாகம பிரதேச சபை எல்லையில், ஹேவாகம் கோரளையில் மெதபத்துவவில் அவிசாவளை பதிவகப்பிரிவில், ஜல்த்தரையில் அமைந்துள்ள தற்போது அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டம் என்று அழைக்கப்படும் ஐரீன்வத்த அல்லது ஐரீன்லேண்ட் வத்த என்ற காணிக்கு 2004.05.22 ஆந் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். அபேரத்ன என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 538 ஆம் இலக்க கூட்டாதன காணிவரைபடத்தின்படி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வீட்டு இலக்கம் C7/1/4 எனவும் கூட்டாதன இலக்கம் 1C7/F1/CP4 எனவும் குறிப்பிடப்பட்டுள்ள முதலாம் மாடியில் அமைந்துள்ள 2 படுக்கை அறைகளையும் வதிவிட அறை, மற்றும் சமையலறையையும் விறாந்தையையும் மலசலகூடத்தையும் கொண்ட அலகின் எல்லைகளாக - வடக்கே : 1CE1 மற்றும் 1CE15 என்ற பொதுவான அலகினால் இந்த பிரிவு வேறாக்கப்படும் சுவரின் மத்தியும் மற்றும் 1C7/F1/CP3 என்ற இலக்கத்தைக் கொண்ட கூட்டாதனமும்; கிழக்கே : 1CE1 மற்றும் 1CE15 என்ற பொதுவான அலகினால் இந்த பிரிவு வேறாக்கப்படும் சுவரின் மத்தியும் ; தெற்கே : 1CE1 என்ற பொதுவான அலகினால் இந்த பிரிவு வேறாக்கப்படும் சுவரின் மத்தியும்; மேற்கே : 1CE1 என்ற பொதுவான அலகினால் இந்த பிரிவு வேறாக்கப்படும் சுவரின் மத்தியும்; மேலாக : நிலத்தின் மத்தியில் இருந்து மேலாக கூட்டாதன இலக்கம் 1C7/F2/CP4 ; கீழாக : நிலத்தின் மத்தியில் இருந்து கூட்டாதான இலக்கம் 1C7/F0/CP4 என்ற அலகும் மற்றும் 1CE 12 என்ற பொதுவான அலகும் அமைந்து காணப்படுகின்றன. இதன் தரையளவு (48.0 ச. மீ.) நாற்பத்து எட்டு சதுர மீட்டர்களாகும். இந்த அலகும் மற்றும் இதற்கு சொந்தமான யாவும் அவிசாவளை காணிப் பதிவு அலுவலகத்தில் Con N/01/113 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

5-161

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : 0100006902 மற்றும் 0100007268
கடனாளியின் முழுப்பெயர் : செமுவெல் நிவ்டன்

''கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பிரபா சந்திரபால என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 448 ஆம் இலக்கத்தையும் 2004.10.26 ஆந் திகதியையும் மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு கே. டி. ஆர். பெரேரா என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 729 ஆம் இலக்கத்தையும் 2005.08.25 ஆந் திகதியையும் கொண்ட அடகுப் பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடகுப் பத்திரத்தின் கீழ் மூன்று இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து நாநூற்று அறுபத்தைந்து ரூபா எண்பது சதம் (ரூபா 3,28,465.80) 2009.05.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால் -

1. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான மூன்று இலட்சத்து எட்டாயிரத்து அறுநூற்று முப்பத்தொரு ரூபா பத்தொன்பது சதத்தினையும் (ரூபா 3,08,631.19) அதற்கான 2009.05.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக பத்தொன்பதாயிரத்து எண்ணூற்று முப்பத்து நான்கு ரூபா அறுபத்தொரு சதத்தினையும் (ரூபா 19,834.61) மொத்தமாக மூன்று இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து நாநூற்று அறுபத்தைந்து ரூபா எண்பது சதத்தினை (ரூபா 3,28,465.80) அறவீடு செய்யவும்;

2. குறிப்பிட்ட மூன்று இலட்சத்து எட்டாயிரத்து அறுநூற்று முப்பத்தொரு ரூபா பத்தொன்பது சதத்திற்கான (ரூபா 3,08,631.19) அறவீடு செய்ய வேண்டிய 17.00% மற்றும் 17.00% வீதமான வருடாந்த வட்டியினை 2009.06.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த

இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்;

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு)

மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். விக்ரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது".

**அட்டவணை**

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரளையில், கெஸ்பேவ பிரதேச சபை எல்லையில் (பெஸ்பேவ உப அலுவலகத்தில்) கனபொல (பொல்ஹேன) கிராமத்தில் அமைந்தள்ள மில்லகஹாவத்த கொட்டச என்ற காணிக்கு 2004.05.15 ஆந் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எச். எல். குணசேகர என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 9436 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி காணித்துண்டிலக்கம் 1 இன் எல்லைகளாக - வடக்கே : பாதையும் ; கிழக்கே : வடக்கே கே. எம். பெரேரா மற்றும் கே. ஜீ. பெரேரா என்பவர்களின் வாரிசுகளுக்கு சொந்தமான மில்லகஹவத்தையும் ; தெற்கே : 3738 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி 4 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கே : 4465 ஆம் இலக்க காணி வரைபடத்தின்படி 3B என்ற இலக்க காணித்துண்டும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு பதினொரு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சஸ்களாகும். (0ஏ. 0றூ. 11.50பே.) அல்லது (0.0291 ஹெக்.) இக்காணித்துண்டும் இதில் காணப்படும் அனைத்தும் ஹோமாகம காணிப் பதிவு அலுவலகத்தில் N352/ 75 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

5-162

---

**மக்கள் வங்கி-காலி மஹவீதிய**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2009.07.31 ஆந் திகதி பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"காலி பிரசித்த நொத்தாரிசு அஜன்தா கபுகமகே என்பவரால் 2005.12.02 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தியதும் 278 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பிரகாரம் கொடுப்பனவில் குனபால விதாரன, சுனேத்ரா விதாரன, நிமாலி ஹங்ஸிகா விதாரன, சாங்சி ஜனாதி விதாரன, மெலிந்த ஜனாதி விதாரன என்பவர்கள் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது மேற்படி ஈட்டுமுறியின் மீது முப்பத்து நான்கு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்து முந்நூற்று இருபத்தொரு ரூபா இருபத்து மூன்று சதம் (ரூ. 34,63,321.23) பணம் மக்கள் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால் 2008.12.17 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு 18.25 வீதப்படி முப்பத்து நான்கு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்து முந்நூற்று இருபத்தொரு ரூபா இருபத்து மூன்று சதம் (ரூ. 34,63,321.23) பணம் ஏலவிற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும், மக்கள் வங்கிச் சட்டத்தின் (29L) 29எல் பிரிவின்கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து முப்பத்து நான்கு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்து முந்நூற்று இருபத்தொரு ரூபா இருபத்து மூன்று சதம் (ரூ. 34,63,321.23) பணம் அறவிடுவதற்காக அதிகாரம்பெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் 278 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டம், காலிப்பெரும் பகுதிக்குள் காலி நகர சபை எல்லைக்குள் தங்கெதரயில் அமைந்திருக்கும் வரிப்பண இலக்கம் 57 என்ற ஸியபல கஹ வலவ்வ அல்லது கல்லித வத்த என்ற காணியில் துண்டு இலக்கம் 1 இல் ஏ மற்றும் ஸி என்ற துண்டு ஒன்றிணைக்கப்பட்ட இலக்கம் டீ என்ற துண்டுக்காக அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. டீ. ஏ. குணசேகர என்பவரால் 2001.12.08 ஆந் திகதிகளில் அளந்து தயாரித்த இலக்கம் 2249 என்ற வரைபடத்தின் பிரகாரம் டீக்கான எல்லைகள் - வடக்குக்கு : தல்கஹ வத்த மற்றும் மாகனகேவத்தயும் ; கிழக்கிற்கு : மீதெனிகேவத்த மற்றும் இக்காணியின் இலக்கம் B என்ற துண்டும் ; தெற்கிற்கு : கிரிப்ஸ் வீதியும் ; மேற்கிற்கு : ஹேனவத்த அல்லது கொட உடவத்தயும் இதன் எல்லைகளாகும். இந்த நான்கு எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் ஒரு ஏக்கர் நாலு பேர்ச்சஸ் (1ஏ. 0றூ. 4பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்திருக்கும் கட்டடங்கள், மரம், மட்டைகள் உட்பட அனைத்தும் ஆகும்.

இக்காணி காலி மாவட்ட காணிப்பதிவகத்தில் இலக்கம் A 631/57 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட இக்காணி ஏ மற்றும் துண்டு இலக்கம் 1 பிரிக்கப்பட்ட ஸி என்ற துண்டு ஒன்றிணைத்து அமைந்த காணி கீழ் விபரத்துக்கமைய மாற்றுப்பதிவுகளின் மூலம் ஒன்றிணைப்பது நல்லதாகும்.

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நகர சபை எல்லைக்குள் தங்கெதர கிரிப்ஸ் வீதியில் அமைந்திருக்கும் வரிப்பண இலக்கம் 57 என்ற கல்லித வத்த என்ற காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் டபிள்யு. ஏ. காவிந்த சில்வா என்பவரால்

1968.12.15 ஆந் திகதிகளில் அளந்து தயாரித்த இலக்கம் 1176 என்ற வரைபடத்தில் குறிப்பிடும் இலக்கம் 01 வேறாக்கப்பட்ட ஸி என்ற துண்டுக்கான எல்லைகள் – வடக்குக்கு : தல்கஹ வத்த மாகனகேவத்தயும் ; கிழக்கிற்கு : மீதெனிகேவத்தயும் ; தெற்கிற்கு : இக்காணியின் இலக்கம் A, B என்ற துண்டுகளும் ; மேற்கிற்கு : ஹேனவத்த அல்லது கொட உடவத்தயும் இதன் எல்லைகளாகும். இந்த நான்கு எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் இரண்டு றூட் ஏழு தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 2றூ. 7.75பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்திருக்கும் கட்டடங்கள், மரம், மட்டைகள் உட்பட அனைத்தும் ஆகும்.

இக்காணி காலி மாவட்ட காணிப்பதிவகத்தில் இலக்கம் A 540/92 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நகர சபை எல்லைக்குள் தங்கெதர கிரிப்ஸ் வீதியில் அமைந்திருக்கும் வரிப்பண இலக்கம் 57 என்ற கல்லித வத்த என்ற காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் எஸ். ஏ. பீபீ என்பவரால் 1955.02.13 ஆந் திகதிகளில் அளந்து தயாரித்த இலக்கம் $XX^A$ மற்றும் $XX^1$ என்ற வரைபடத்தின் பிரகாரம் லொட் 01 என்ற துண்டுக்கான எல்லைகள் – வடக்குக்கு : இக்காணியின் இலக்கம் C என்ற துண்டும் ; கிழக்கிற்கு : இக்காணியின்இலக்கம் Bஎன்ற துண்டும் ; தெற்கிற்கு : கிரிப்ஸ் வீதியும்; மேற்கிற்கு : இக்காணியின் இலக்கம் W என்ற துண்டும் இதன் எல்லைகளாகும்.

இந்த நான்கு எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் 1 றூட், முப்பத்தாறு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 36.25பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்திருக்கும் கட்டடங்கள் மரம், மட்டைகள், உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

இக்காணி காலி மாவட்ட காணிப்பதிவகத்தில் இலக்கம் A 442/ 367 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்சன் வீதி,
காலி.

5-167

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட)
வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான
(விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான
தீர்மானம்

கடன் இலக்கம் : 0102900273

கடனாளியின் முழுப்பெயர் : தியதொட்ட வித்தானகே சுசித்திராச நாமலி சில்வா

"கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எப். சி. பெரேரா என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 944 ஆம் இலக்கத்தைக் கொண்ட 2007.12.04 ஆந் திகதியிடப்பட்ட அடமானப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், மேற்குறிப்பிட்ட அடமானப்பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டதன் பின்பு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் கீழ் எட்டு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து நூற்று அறுபத்தாறு ரூபா எண்பத்தைந்து சதம் (ரூபா 8,84,166.85) 2009.05.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால் –

1. குறிப்பிட்ட கடன் தொகையின் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான எட்டு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்து முந்நூற்று பதினொரு ரூபா இருபத்தேழு சதத்தினையும் (ரூ. 8,63,311.27) அதற்கான 2009.05.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக இருபதாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தைந்து ரூபா ஐம்பத்தெட்டு சதத்தினையும் (ரூபா 20,855.58) மொத்தமாக எட்டு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து நூற்று அறுபத்தாறு ரூபா எண்பத்தைந்து சதத்தினை (ரூபா 8,84,166.85) அறவீடு செய்யவும்;

2. குறிப்பிட்ட எட்டு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்து முந்நூற்று பதினொரு ரூபா இருபத்தேழு சதத்திற்கான (ரூ. 8,63,311.27) அறவீடு செய்ய வேண்டிய 3% மான வருடாந்த வட்டியினை 2009.06.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்;

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு)

மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். விக்ரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது".

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், ஹோவாகம் கோறளையில், மெதபத்துவவில், ஹோமாகம பிரதேச சபை எல்லையில், ஜல்த்தரையில் அமைந்துள்ள ஜரீன்எஸ்டேட் அல்லது ஜரின்லேண்ட் எஸ்டேட் தற்போது அரச ஊழியர்களுக்கான வீடமைப்புத் திட்டம் என்று அழைக்கப்படும் காணிக்கு 2004.05.27 ஆந் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எஸ். அபேரத்ன என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 539 ஆம் இலக்க கூட்டாதன காணிவரைபடத்தின் 3 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய

வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வீட்டு இலக்கம் C9/1/4 எனவும் கூட்டானத இலக்கம் 1C9/F1/CP4 எனவும் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மாடிகளைக் கொண்ட C9 என்ற கட்டிடத்தின் கீழ் மாடியில் அமைந்துள்ள C9/1/4 என்ற வதிவிடமும் இதே காணிவரைபடத்தில் 3 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1CE1, 1CE4 மற்றும் 1CE6 என்ற பொது இடங்களையும் கொண்ட 1C9/F1/CP4 என்ற எல்லைகளாக - வடக்கே : கூட்டாதன வரைபடத்தின்படி 1C9/F1/CP3 என்ற அலகின் 1CE1 மற்றும் 1CE5 என்ற பொதுவான அலகினால் இந்த பிரிவு வேறாக்கப்படும் சுவரின் மத்தியும்; கிழக்கே : 1CE1 மற்றும் 1CE5 என்ற பொதுவான அலகினால் இந்த பிரிவு வேறாக்கப்படும் சுவரின் மத்தியும்; தெற்கே : 1CE1 என்ற அலகுகளினால் இந்த பிரிவு வேறாக்கப்படும் சுவரின் மத்தியும் ; மேற்கே : 1CE1 என்ற அலகினால் இந்த பிரிவு வேறாக்கப்படும் சுவரின் மத்தியும் ; மேலாக : மாடியின் மத்தியில் இந்த அலகை வேறாக்கும் கூட்டாதன இலக்கம் 1C9/F2/CP4 என்ற பகுதியும் ; கீழாக : நிலத்தின் மத்தியில் இந்த அலகு வேறாக்கப்படும் கூட்டாதன இலக்கம் 1C9/F0/CP4 என்ற பகுதியின் 1CE1 என்ற அகும் அமைந்து காணப்படுகின்றன. இதன்படி (48 ச. மீ.) நாற்பத்து எட்டு சதுர மீட்டர் விஸ்தீரணம் கொண்ட கூட்டாதனம் மற்றும் அதற்கு சொந்தமான பொதுவசதிகள் யாவும் அவிசாவளை காணிப் பதிவு அலுவலகத்தில் Con N/02/59 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

5-163

---

## இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, (திருத்தப்பட்ட) வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கான (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழான தீர்மானம்

கடன் இலக்கம் : 0114400307
கடனாளியின் முழுப்பெயர் : ராஜா சுசில் பெரேரா

"கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. டி. சிறிவர்தன என்பவரினால் எழுதி உறுதி செய்யப்பட்ட 109 ஆம் இலக்கத்தைக் கொண்ட 1996.06.13 ஆந் திகதியிடப்பட்ட அடகுப்பத்திரத்தின் மூலம் இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனம் இதன் பிறகு வங்கி என்று அழைக்கப்படும் (2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட) 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன சட்டத்தினால் உருவாக்கப்பட்ட இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு மேற்குறிப்பிட்ட கடனாளியினால், அடகு வைக்கப்பட்டதன் பின்பு பெற்றுக் கொண்ட வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனுக்கான தவணைப் பணத்தினை செலுத்த தவறியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் கீழ் மூன்று இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து நூற்று ஐம்பத்தொன்பது ரூபா எழுபத்தாறு சதம் (ரூபா 3,79,159.76) 2009.07.31 ஆந் திகதி வரை இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு கிடைக்க வேண்டியிருப்பதால் -

1. குறிப்பிட்ட கடன் தொகையில் மீளச் செலுத்தப்படாத முழுத்தொகையான மூன்று இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து தொளாயிரத்து நாற்பத்தொன்பது ரூபா இருபத்தெட்டு சதத்தினையும் (ரூபா 3,54,949.28) அதற்கான 2009.07.31 ஆந் திகதி வரையிலான வட்டியாக இருபத்து நான்காயிரத்து இருநூற்று பத்து ரூபா நாற்பத்தெட்டு சதத்தினையும் (ரூபா 24,210.48) இதன் படி மொத்தமாக மூன்று இலட்சத்து எழுபத்தொன்பதாயிரத்து நூற்று ஐம்பத்தொன்பது ரூபா எழுபத்தாறு சதத்தினை (ரூபா 3,79,159.76) அறவீடு செய்யவும்;

2. குறிப்பிட்ட மூன்று இலட்சத்து ஐம்பத்து நான்காயிரத்து தொளாயிரத்து நாற்பத்தொன்பது ரூபா இருபத்தெட்டு சதத்திற்கான (ரூபா 3,54,949.28) அறவீடு செய்ய வேண்டிய 18.50% மான வருடாந்த வட்டியினை 2009.08.01 ஆந் திகதியிலிருந்து சொத்தினை பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் திகதி வரைக்கும் (அந்த இரண்டு தினங்களும் அடங்கலாக) மீள அறவீடு செய்து கொள்வதற்காகவும்;

3. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியின் மூலம் வழங்கப்பட்ட கடனை அறவீடு செய்யும் விஷேட ஏற்பாடுகள் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவீடு செய்யத்தக்க பணம் மற்றும் கட்டணங்களை அறவீடு செய்து கொள்வதற்கும் (இதுவரையில் ஏதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்த பின்பு)

மேற்குறிப்பிட்ட அடமானப் பத்திரத்தின் மூலம் இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கிக்கு அடகு வைக்கப்பட்டுள்ள இங்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனம் மற்றும் வளவு, பகிரங்க ஏல விற்பனையாளர் டபிள்யூ. எம். விக்ரமரத்ன என்பவரின் மூலம் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களை அறவீடு செய்யும் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் பணிப்பாளர்கள் சபையினால் 2009 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தின்போது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது".

### அட்டவணை

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், சல்பிட்டி கோரளையில், பல்லே பத்துவவில், மொரட்டுவ நகர சபை எல்லையில் ராவத்தாவத்த கிராமத்தில் அமைந்துள்ள மாதன்கஹவத்த என்ற காணிக்கு 1977.09.22 ஆந் திகதி, அனுமதிபெற்ற நிலஅளவையாளர் எல். பீ. எச். த சில்வா என்பவரினால் அளந்து தயாரிக்கப்பட்ட 383 ஆம் இலக்க காணிவரைபடத்தின்படி காணித்துண்டிலக்கம் 5 இன் எல்லைகளாக - வடக்கே : பாதையும் ; கிழக்கே : 7 ஆம் இலக்க காணித்துண்டும் ; தெற்கே : 6 ஆம் இலக்க காணித்துண்டும் ; மேற்கே: 1 ஆம், 2 ஆம் இலக்க காணித்துண்டுகளும் அமைந்து காணப்படுகின்றன. இதன் பரப்பளவு ஒன்பது தசம் எட்டு எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 9.88பே.) இக்காணித்துண்டு இதில் காணப்படும் ஏனைய அனைத்துமுடன் பாதைக்காக உரிமையும் தெல்கந்த காணிப் பதிவு அலுவலகத்தில் M2157/23 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

பொது முகாமையாளர்.

5-164

**மக்கள் வங்கி**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி (29 D) என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி (29 D) என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2009.09.25 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"கந்தேகெதர பிரியந்த பத்மகுமார என்பவர், மக்கள் வங்கியின் சார்பில் நுவரேலியாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜயமினி அம்பகஹாவத்த என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, திசெம்பர் 23 ஆந் திகதிய 954 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வருமதியாகவுள்ள கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். சொல்லப்பட்ட 954 ஆம் இலக்க முறிமீது இரண்டு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபா (ரூ. 2,93,750.00) கொண்ட தொகை இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. சொல்லப்பட்ட இரண்டு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபா (ரூ. 2,93,750.00) கொண்ட தொகையையும் சொல்லப்பட்ட இரண்டு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து எழுநூற்று ஐம்பது ரூபா (ரூ. 2,93,750.00) கொண்ட தொகை மீது 2009.03.02 ஆந்திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு இருபத்தாறு (26%) வீதப்படியான மேலதிக வட்டியையும், செலவுதொகைகளையும், வேறு விற்பனை இறுப்பபுகளையும் அதன்பின்னர் கொடுப்பனவு (ஏதேனும்) பெறப்பட்டிருப்பின் அதனைக் கழித்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 954 ஆம் இலக்க ஈட்டுமுறியினால் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பு 5, ஹவ்லொக் வீதியிலுள்ள 290 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மத்திய மாகாணம், நுவரேலியா மாவட்டத்திலுள்ள கொத்மலேயின் உடபான கோறளையில் கும்பலொலுவவில் அமைந்துள்ளதும், "கல்கெட்டியேஹேன" எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; பரப்பளவில் இது. குரக்கனில் ஒரு நெலியைக் கொண்டுள்ளதுடன், சொல்லப்பட்ட காணி பின்வரும் எல்லைகளையுமுடையது - வடக்கில் : டீ. ஏ. ஏ. ரூபசிங்கவினால் உரிமைகோரப்பட்ட கல்கெட்டியேகும்புரவின் கல்வேலி ; கிழக்கில் : திருச்சபைக்குச் சொந்தமான காணியைத் தனிவேறாக்குகின்ற பாறைக்கல் ; தெற்கில் : ரூபன்ஹாமியினால் உரிமைகோரப்பட்ட காணியின் கல்வேலி ; மற்றும் மேற்கில் : பிரதான வீதி. அதன் மீதுள்ள கட்டிடங்களுடனும், பயிர்களுடனும், வேறெல்லாவற்றுடனும் சேர்த்து. அத்துடன் நுவரேலியாக் காணிப்பதிவகத்தில் கியூ122/224 என்பதன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

சொல்லப்பட்ட காணி ஒரு மீள்நில அளவையின்படி கீழே விவரிக்கப்படுகின்றது :-

மத்திய மாகாணம், நுவரேலியா மாவட்டத்திலுள்ள கொத்மலேயின் உடபான கோறளையில் கும்பலொலுவ கிராமத்தில் அமைந்துள்ளதும், "கல்கெட்டியஹேன" எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் லியனகே சிறிபால என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001, ஓகத்து 11 ஆந் திகதிய 527ஏ ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதும், காணித்துண்டம் ஏ என அடையாளமிடப்பட்டதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; பரப்பளவில் இது. இருபத்தொன்பது பேர்ச்சஸ்களை (0ஏ. 0றூ. 29பே.) அல்லது 0.0734 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன், வரைபடம் இல.527ஏ இலுள்ள சொல்லப்பட்ட காணித்துண்டம் ஏ பின்வரும் எல்லைகளையுமுடையதும்- வடக்கில் : ஏ. ஏ. ரூபசிங்கவினால் உரிமைகோரப்பட்ட கல்கெட்டியேகும்புர ; கிழக்கில்: திருச்சபைக்குச் சொந்தமான காணியும் ஏ. ஏ. ரூபசிங்கவினால் உரிமைகோரப்பட்ட காணியும் ; தெற்கில் : கம்பளையிலிருந்து புந்தலுஓயா வரையிலான பிரதான வீதி; மேற்கில் : ஏ. ஏ. ரூபசிங்கவினால் உரிமைகோரப்பட்ட கல்கேட்டியேகும்புர ; அதன் மீதுள்ள கட்டிடங்களுடனும்; பயிர்களுடனும். வேறெல்லாவற்றுடனும் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 40, பார்க் வீதி,
நுவரேலியா.

5-170

---

**பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப. வ. க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(தெஹிவளை கிளை)
வாடிக்கையாளரின் பெயர் : வரணகே ரங்கிக்க ஸ்ரீபாலி பொன்சேக்கா

2010.03.31 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் பணிப்பாளர்கள் சபை கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது :-

" வரணகே ரங்கிக்க ஸ்ரீபாலி பொன்சேக்கா, முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அறியப்பட்ட பதிவு இல. பீகியூ. 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு என். ஆர். ஹேவதந்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2007, யூலை 31 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டுமுறி இல. 1345 மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். தொலவத்தகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2005, திசெம்பர் 29 ஆந்

திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1910 ஆகியவற்றின் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலாலும் ;

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. (இதனகத்துப் பின்னர் ''வங்கி'' என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட முறிகள் மூலம் 2010.02.01 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதி வரை பத்து இலட்சம் ரூபா (ரூ. 10,00,000) கொண்ட மீது ஆண்டிற்கு இருபத்துநான்கு சதவீத (24%) வட்டி மற்றும் பத்து இலட்சம் ரூபா (ரூ. 10,00,000) கொண்ட தொகையை விஞ்சுகின்ற ஆண்டிற்கு இருபத்தொன்பது (29%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின் மீது பதினொரு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து அறுநூற்று அறுபத்துமூன்று ரூபா நாற்பத்தாறு சதம் (ரூபா 11,57,663.46) கொண்ட தொகை மற்றும் 2009.06.30 ஆந் திகதிவரையான வட்டியும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும் ;

சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 1910, 1345 ஆகியவற்றின் மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை பதினொரு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து அறுநூற்று அறுபத்துமூன்று ரூபா நாற்பத்தாறு சதம் (ரூபா 11,57,663.46) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் 2010.02.01 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய, சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கொழும்பு 12, பெல்மொன்ட் தெரு, இல. 9, ''எம். எஸ். ஒக்ஷன்ஸ்'' ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் சிறியாணி மனம்பேறி அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பள்ளே பற்று, தெஹிவளை- கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லைகளுக்குள் தெஹிவளை, கவுடான வீதிக்கப்பால் ரஸிக்க மாவத்தை, வரிமதிப்பு இல. 24/9, ஐக் கொண்டு அமைந்தள்ளதும் 'பிட்டகொட்டுவேவத்த என்ற ஓவிட்டவத்தை' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. எம். டபிள்யூ. சமரநாயக்க அவர்களால் தயாரிக்கப்பட்டு 2000, யூலை 26 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 1242 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஐ. டபிள்யூ. டபிள்யூ. இந்திரதிஸ்ஸ அவர்களால் தயாரிக்கப்பட்டு 1975, சனவரி 21 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 3003 இல் குறிப்பிடப்பட்ட துண்டு ஏ இன் ஒரு மீள் நிலஅளவையாக இருக்கின்ற) என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன் கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு ஏ இன் எல்லைகளாவன வடக்கு : வீதி ; கிழக்கு: கவுடான வீதி, வரிமதிப்பு இல. 24/7; தெற்கு : கவுடான வீதி வரிமதிப்பு இல. 24/8 ; மேற்கு : கவுடான வீதி, வரிமதிப்பு இல. 24/9 இது, பதினொன்று தசம் ஏழு ஐந்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 11.75பே.) அல்லது 0.0290 ஹெக்டயார் விஸ்தீரணமுடையது. கல்கிஸ்ஸை (நுகேகொடை தெல்கந்த) காணி பதிவகத்தில் தலைப்பு எம் 2916/245 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மனோநீதா ஆரியநந்த,
முகாமையாளர் - அறவீடுகள்.

5-175/4

---

**மக்கள் வங்கி - ஹிக்கடுவை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி (29 D) என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி (29 D) என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் 2009.09.25 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

..காலி பிரசித்த நொத்தாரிசு அஜன்தா கபகமகே என்பவரால் 2005.08.02 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 489 என்ற ஈட்டுமுறியின் பிரகாரம் கொடுப்பனவில் விதாரன தமித விக்ரமசிங்ஹ இரேசா சியாமலி பரனவிதான என்பவர்கள் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது மேற்படி முறியின்மீது பதினேழு இலடசத்து முப்பத்துமூவாயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா நாற்பத்தெட்டு சதம் (17,33,333.48) மக்கள் வங்கிக்கு வருமதியாக செலுத்தப்படவேண்டியுள்ளபடியால் 2009.05.09 ஆந் திகதியில் இருந்து ஒரு வருடத்துக்கு 16.5 வீதப்படி பதினேழு இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா நாற்பத்தெட்டு சதம் (17,33,333.48) மீது ஏல விற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும், மக்கள் வங்கிச்சட்டத்தின் 29எல் (29L) பிரிவின் கீழ் அறவிடப்படவேண்டிய பணத்தையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து பதினேழு இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து முந்நூற்று முப்பத்துமூன்று ரூபா நாற்பத்தெட்டு சதம் (17,33,333.48) பணம் அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரல் இலக்கம் 489 இலக்க ஈட்டு முறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தினால் அதற்குரியத்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.,,

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

தென் மாகாணம், காலி மாவட்டம், வெல்லபட பத்துவே, ஹிக்கடுவையில் அமைந்துள்ள ஹிமிதா மரக்கல துன்ஹவுல் வத்த என்ற காணியின் இலக்கம் ஏ என்ற துண்டுக்கு அதிகாரம் பெற்ற நில

அளவையாளர் என். சி. விஜேவிக்கிரம என்பவரால் 2005.02.09 ஆந் திகதி அளந்து தயாரித்த இலக்கம் 1764 என்ற வரைபடத்தின் பிரகாரம் A என்ற துண்டுக்கு எல்லைகள் - வடக்கிற்கு : வீதிக்காக கைவிடப்பட்ட நிலத்துண்டு மற்றும் இக்காணியின் 2 என்ற துண்டு ; கிழக்கிற்கு : இலக்கம் 01 என்ற துண்டால் அளந்து வேறாக்கிய 1B என்ற துண்டு மற்றும் இலக்கம் 02 என்ற துண்டும் ; தெற்கிற்கு : வீதியும் ; மேற்கிற்கு: சிறு வீதி மற்றும் அறும ஆசாரிகே மஹவத்தை அல்லது நவன்தந்ன எத்தென்னெவத்தை என்ற துண்டுகளும் இதன் எல்லைகளாகும். இந்த எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் ஒரு றூட் பூச்சியம் தசம் ஆறு எட்டு பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 0.68பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்துள்ள கட்டடங்கள், மரம், மட்டைகள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

இக்காணி காலி மாவட்ட காணிப் பதிவகத்தில் இலக்கம் C807/18 கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்,
இல. 22, கீழ் டிக்சன் வீதி,
காலி.

5-171

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கணக்கு இல. 1011 5329 4610 - பீ. கருணாரத்ன

2010, சனவரி 28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் -

"PQ 144 எனும் கம்பனி இலக்கத்தைக் கொண்ட சம்பத் வங்கி பீஎல்சீ சார்பாக கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. என். எம். கொடகொட என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, ஓகத்து 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 414 எனும் ஈட்டு முறியின் மீது அடகு வைக்கப்பட்டு பிணையாக இங்கு அட்டவணையில் நேர்த்தியாக விபரிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் நிலமனைகள் மீது பெற்றுக்கொண்ட கடனை, கடமைப்பட்டவர் என்ற வகையில் கடமைப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரபாத் கருணாரத்ன என்பவர், மீள் செலுத்தத் தவறியுள்ளமையினால், இல. 414 எனும் ஈட்டு முறியின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையை இலங்கையின் சட்டபூர்வமாகச் செல்லுபடியாகும் ரூபாவில் இருபத்து மூன்று இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து எழுநூற்று பதினேழு ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூ. 23,51,717.38) 2009, திசெம்பர் 18 ஆந் திகதி சம்பத் வங்கி பீஎல்சீ இற்குச் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், குறிப்பிடப்பட்ட இருபத்து மூன்று இலட்சத்து ஐம்பத்தோராயிரத்து எழுநூற்று பதினேழு ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூ. 23,51,717.38) 2009, திசெம்பர் 19 ஆந் திகதி முதல் இல. 414 எனும் ஈட்டு முறியின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இருபத்தொரு இலட்சத்து நாற்பத்தோராயிரத்து நூற்று அறுபத்தொன்பது ரூபா நாற்பது சதம் (ரூ. 21,41,169.40) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு தசம் ஐந்து வீதம் (17.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டுமுறி இல. 414 இன் மீது பிணயாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1990 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வங்கிக் கடன் மீட்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைவாக சம்பத் வங்கி பீஎல்சீ இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனே பாணந்துறை பிரதேச சபை எல்லைகளுக்குள் வடக்கு தல்பிட்டியவில் அமைந்த "தெவட்டகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. ஏ. வித்தாரன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, ஒற்றோபர் 11 ஆந் திகதியிடப்பட்ட இல. 8702 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கிற்கு : யூ. ஜயசேகரவின் தெவட்டகாஹாவத்தையின் ஒரு பகுதி; கிழக்கிற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். டபிள்யூ. எல். டி. சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 14221 எனும் வரைபடத்தில் லொட் D2. உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எல். டபிள்யூ. எல். டி சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 12842 எனும் வரைபடத்தில் லொட்கள் E (வீதி) இன் ஒரு பகுதி மற்றும் 1998.12.11 ஆந் திகதியிடப்பட்ட இல. 10198 எனும் வரைபடத்தில் லொட் 2 (வீதி) ; தெற்கிற்கு : 1998.12.11 ஆந் திகதியிடப்பட்ட இல. 10198 எனும் வரைபடத்தில் லொட் 2 (வீதி) ; மற்றும் மேற்கிற்கு : ஜே. ஜே. சில்வாவின் தெவட்டகாஹாவத்தையின் ஒரு பகுதி மற்றும் ஜே. பி. டி சில்வாவின் தெவட்டகாஹாவத்தையின் ஒரு பகுதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினொன்று தசம் ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 11.7பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் சகல வழி உரிமைகள், ஏனைய சௌகரியங்கள், வரப்பிரசாதனங்கள், உட்பிரவேசங்கள், இரண்டாந்தர மார்க்க உரிமைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய இணைப்புகளுடன் கூறப்பட்ட இல. 8702 எனும் வரைபடத்திற்கு அமைவாக பாணந்துறை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் F 550/183 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

5-151/5

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் | தபால் செலவு |
|---|---|---|
| | ரூபா ச. | ரூபா ச. |
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | தபால் செலவு |
|---|---|---|
| | ரூபா ச. | ரூபா ச. |
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.*** *- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

***அட்டவணை - 2010***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மே** | .. | வெள்ளி | 07.05.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.04.2010 |
| | | வெள்ளி | 14.05.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.04.2010 |
| | | வெள்ளி | 21.05.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.05.2010 |
| | | புதன் | 26.05.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.05.2010 |
| **யூன்** | .. | வெள்ளி | 04.06.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.05.2010 |
| | | வெள்ளி | 11.06.2010 | .. | நண்பகல் 12 | புதன் | 26.05.2010 |
| | | வெள்ளி | 18.06.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.06.2010 |
| | | வியாழன் | 24.06.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.06.2010 |
| **யூலை** | .. | வெள்ளி | 02.07.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.06.2009 |
| | | வெள்ளி | 09.07.2010 | .. | நண்பகல் 12 | வியாழன் | 24.06.2009 |
| | | வெள்ளி | 16.07.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.07.2010 |
| | | வெள்ளி | 23.07.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.07.2010 |
| | | வெள்ளி | 30.07.2010 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.07.2010 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*